பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி9 புதன்கிழமை (25-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:241

## விடிகாலை நடந்த வியத்தகு அதிரடி

# கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தினுள் புலிகளின் அணி ஊடுருவிப் பெரும்தாக்குதல்!

## குண்டுவீச்சு விமானங்கள் கூண்டோடு அழிக்கப்பட்டன

கொழும்பு,ஜூலை25

**அதிஉச்சப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த - இலங்கை விமானப் படையின் மிக முக்கிய தளமான - கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீதும், அருகில் இருந்த பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் நேற்று விடிகாலை வேளை ஊடுருவி நடத்திய வியத்தகு அதிரடித் தாக்குதலில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த விமானப் படையின் தாக்குதல் விமானக் கலங்கள் எட்டும் கூண்டோடு அழிக்கப்பட்டன. அருகில் சர்வதேச விமானத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று பெரிய பயணிகள் விமானங்களும் அழிந்து நாசமாகின; மற்றும் மூன்று சரக்கு விமானங்களும் சேதமடைந்தன.**

1983 ஜூலைக் கலவரங்கள் நடந்த ஜூலை 23 ஆம் திகதிய நினைவு நாளை ஒட்டி - ஜூலை 23 பின்னிரவுக்குப் பின் - நேற்று விடிகாலை 3.55 மணிக்கு இத்தாக்குதல் ஆரம்பமானதாக அறிவிக்கப்படுகின்றது.

புலிகளின் அணிகள் இரண்டு வழிகளில் பிரிந்து சென்று இத்தாக்குதலை ஆரம்பித்ததாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு - நீர்கொழும்பு வீதியிலிருந்து விமானப்படைத் தளத்தை நோக்கிச் செல்லும் ஒரு கால்வாய் வழியாக முன்னேறிய அணி, விமானப்படைத் தளத்தின் முகப்பில் அங்கு காவலில் இருந்த படையினர் மீது திடீர்த் தாக்குதலை நடத்தி, அனைதுப் படையினரதும் கவனத்தையும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அழிக்கப்பட்ட 14 விமானங்கள்

நேற்றைய தாக்குதலில் புலிகள் அழித்த 14 விமானங்களின் விவரங்கள் வருமாறு:-

**தாக்குதல் விமானங்கள்**

- இஸ்ரேல் தயாரிப்பு - கிபிர் ரக - ஜெட் குண்டுவீச்சு விமானங்கள் - 02
- ரஷ்யத் தயாரிப்பு - மிக் - 27 ரக - ஜெட் குண்டுவீச்சு விமானம் - 01
- ரஷ்யத் தயாரிப்பு - பீரங்கிகள் பொருத்தப்பட்ட - எம்.ஐ.17 ரக ஹெலிகள் - 02
- பாகிஸ்தான் - சீன கூட்டுத் தயாரிப்பான - கே.8 ரக - பயிற்சி ஜெட் விமானங்கள் - 03

**சிவில் விமானங்கள்**

- ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சிவில் விமானங்கள் - 06

இவற்றில் பயணிகளை ஏற்றிச் செல்லும் மூன்று 'ஏயர் பஸ்' ரக விமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. மூன்று சரக்கு விமானங்கள் சேதமடைந்துள்ளன.

(உ)

## ரூ.4000 கோடிக்கு மேல் இழப்பு

நேற்றைய தாக்குதலில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு நாலாயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று முதலில் கிடைத்த மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது மேலும் உயரும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அழிக்கப்பட்ட மூன்று 'ஏயர் பஸ்' ரக பயணிகள் விமானங்களின் பெறுமதி மட்டும் முப்பது கோடி அமெரிக்க டொலர் (சுமார் 2 ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபா) என்று விமானப் போக்குவரத்து. விமான நிலைய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தவிர, மூன்று சரக்கு விமானங்களும் எட்டு தாக்குதல் விமானங்களும் அழிக்கப்பட்டிருப்பதால் இழப்பு - இலங்கைப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை - ஈடு செய்ய முடியாததாக இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர்.

இலங்கை விமானப் போக்குவரதது சேவையான ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் சேவையின் விமானக்கலங்களின் அரைப்பங்கை அது இழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## நல்லூர்க் கந்தன் உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

வரலாற்றுப் பெருமைமிகு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இந்த உற்சவத் திருவிழாக்கள் இன்று தொடக்கம் அடுத்தமாதம் 20ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 3ஆம் திகதி மாலை 5மணிக்கு மஞ்சமும், 12ஆம் திகதி கார்த்திகை உற்சவமும், 13ஆம் திகதி கைலாச வாகனமும், 16ஆம்

(14 ஆம் பக்கம் பார்க்க)




கட்டுநாயக்க விமான நிலையத்தின் தார்ச்சாலையில் சூட்டுக்கு இலக்காகி இறந்து கிடக்கும் புலிகள் போராளி ஒருவர்.





புலிகளின் தாக்குதலில் எரிந்து கிடக்கும் 'ஏயர் பஸ்' விமானம் மேலே. கிபிர் கீழே.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு மருதனார்மடம் திறந்தவெளி அரங்கு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ விளையாட்டுக்கழகமும் எதிர் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகமும் பங்குபற்றுகின்றன. (க-86)

# திவ்வியனுக்கு 14ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை எதிர்வரும் 14ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

பலத்த பாதுகாப்புடன் யாழ்.நீதிமன்றத்தில் நேற்று திவ்வியன் ஆஜர் செய்யப்பட்டசமயம் பல்கலைக்கழக மணவர்கள் பலர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

திவ்வியனை மருத்துவ பரிசோதனை செய்த யாழ்.வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சிறீராஜேஸ்வரன் வைத்திய அறிக்கையை சமர்ப்பித்து சாட்சியம் அளித்தார்.

திவ்வியனை விடுவிப்பது தொடர்பாக சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்காததை அடுத்து எதிர்வரும் 14ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(க-3-6-86-173)


யா/உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
உரும்பராய்.

பரிசளிப்பு விழாவும் கற்பகம் மலர் வெளியீடும் 2001

காலம்: நாளை (2001–07–26)வியாழக்கிழமை, பி. ப. 2. 30 மணி

இடம்: பொன்னுத்துரை அரங்கு

தலைமை: திரு. சு. யோகராசா (முதல்வர்)

முதன்மைவிருந்தினர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

விருந்தினர்கள்: திரு. கு. மணிபல்லவராஜன் (நிசாந்தன்)
(ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர்; தலைவர், நல்லூர் பிரதேச சபை)

திரு. நா. வரதராசா
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்விவலயம், யாழ்ப்பாணம்)

திரு. பு. குணசிங்கம்
(தலைவர், வலி. கிழக்கு பிரதேச சபை)

திரு. இ. கணேசன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்வி வலயம், தென்மராட்சி)

திரு. U.L.A ரவி
(உபதலைவர், வலிகிழக்கு பிரதேச சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி17561)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-

சோதி போட்டோ,
உரும்பராய், வடக்கு,
(உரிமையாளர்: கருணாநந்தசோதி)

புஷ்பம் மரக்காலை,
கற்பகப் பிள்ளையார் கோயில் அருகில்,
உரும்பராய், தெற்கு.


## தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் இளம்பெண் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை25

உடல் முழுவதும் எரிந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் இளம்பெண் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவிலைச்சேர்ந்த கணேசமூர்த்தி கிருஷாந்தி (வயது 17) என்ற இளம்பெண்ணே தீக்காயங்களுக்குள்ளானவராவார். (க-15)

## நல்லூர் உற்சவ கம்பன் கழக சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை25

நல்லைக்கந்தன் உற்சவ காலத்தில் அகில இலங்கைக் கம்பன் கழகம் ஏற்பாடு செய்துள்ள சமயச் சொற்பொழிவுகள் இன்று தொடக்கம் மாலை 6 மணிமுதல் 7மணிவரை கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றுமுதல் 12 தினங்களுக்கு கந்தபுராணச் சொற்பொழிவுகளை செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேலும் -

தொடர்ந்து 13 தினங்களுக்கு பெரியபுராணம் சொற்பொழிவுகளை செஞ்சொற்கொண்டல் ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர்.

இன்று தொடக்கவுரையை கலாநிதி க.குணராசாவும் இறுதிநாள் நிறைவுரையை க.சிவராமலிங்கமும் நிகழ்த்துவர். (க-3)

## விதைநெல் விநியோகம்

அச்சுவேலி,ஜூலை25

வலி.கிழக்குப் பிரிவு விவசாயிகள் புத்தூர் கமநல கேந்திர நிலையத்தில் விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம் என்று புத்தூர் கமநலக் கேந்திர நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். விதைநெல் தேவைப்படுவோர் நேரகாலத்திற்கு வந்து பெற்றுச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை25

கரணவாய் மூத்த விநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் 2ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-15)

★ ★ ★

நெல்லியடி,ஜூலை25

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று காலை 6.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் இடம்பெறும். (க-109-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா திருப்பலி இன்று புதன்கிழமை காலை 7மணிக்கு யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜே.பி.சு.செல்வராஜா தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இன்றைய திருவிழா திருப்பலி "தலைவனே பணியாளனாக ஏற்றுக் கொள்" என்ற கருப்பொருளில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு புனித யாகப்பரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (க-6)

# ஊர்காவற்றுறைக்கு மின்சாரம்; புனரமைப்புப் பணிகள் துரிதம்

ஊர்காவற்றுறை,ஜூலை25

ஊர்காவற்றுறை நகருக்கு மின்சாரம் வழங்குவதற்கான புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேதமடைந்த மின்கம்பங்கள் அகற்றப்பட்டு புதிய மின்கம்பங்கள் பொருத்தப்படுவதுடன் மின்கம்பிகளில் சாய்ந்துள்ள மரங்களும் வெட்டி அப்புறப்படுத்தப்படுகின்றன.

இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையில் இருந்து 4 லட்சம் ரூபாவும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# வல்லைச் சோதனைச் சாவடியில் மினிபஸ் - இராணுவ வாகனம் விபத்து

## பயணிகள் எழுவர் காயமுற்றனர்

நெல்லியடி,ஜூலை25

தரித்து நின்ற இராணுவ வாகனத்துடன் மினிபஸ் மோதியதில் அதில் பயணம் செய்த 7பேர் படுகாயம் அடைந்தனர். மினிபஸ்ஸின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வல்லை இராணுவ சோதனைச் சாவடிப் பகுதியில் இடம்பெற்றது.

பலாலியிலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு சென்று கொண்டிந்த இராணுவ வாகனம், திடீரென வல்லை இராணுவ சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்ட சமயம் யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வந்து கொண்டிருந்த மினிபஸ்ஸே இவ்விபத்தில் சிக்கிக் கொண்டது.

இந்த விபத்தில் பயணிகளான பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி வேணுகோபால் சற்குணதிலகம் (வயது 41), கற்கோவலத்தைச் சேர்ந்த காத்தமுத்து அமிர்தலிங்கம் (வயது 52), கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சரவணமுத்து ரவீந்திரன் (வயது 41), துன்னாலை கிழக்கைச் சேர்ந்த மகேந்திரன் மோகன்ராஜ் (வயது 19), கரணவாயைச் சேர்ந்தவர்களான சுந்தரம் சுகுமார் (வயது 31), அச்சலிங்கம் திருக்குமார் (வயது 19) ஆகிய ஏழு பயணிகளுமே காயங்களுடன் மந்திகை மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(க-109-117)


**UNIVERSITY OF JAFFNA**
**SRILANKA**

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 31.08.2001 for the undermentioned posts.

**1. FACULTY OF ARTS**

i. **ASSISTANT LECTURER** (ON CONTRACT) in Anthropology/Archaeology/ Art and Design/ Christian Civilization/ Dance (Bharathanatyam)/ Dance (Vocal)/ Drama & Theatre Arts/ Economics/ Fine Arts/ Geography/ Hindu Civilization/ Hindu Philosophy/ Music-Carnatic (Vocal, Veena, Violin)/ Political Science/ Psychology/ Sanskrit/ Sociology/ Tamil.

ii. **TUTOR** (ON CONTRACT) in Geography/ History.

iii. **INSTRUCTOR** (ON CONTRACT) in Art and Design/ Dance/ Music.

**2. FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

i. ASSISTANT LECTURER (ON CONTRACT) in Business Administration/ Commerce.

ii. VISITING LECTURER in Law (Civil, Industrial, Commercial)

**3. FACULTY OF AGRICULTURE**

i. ASSISTANT LECTURER (ON CONTRACT)/ DEMONSTRATOR (ON CONTRACT) in Agronomy, Agricultural Biology, Agricultural Engineering, Agricultural Economics, Agricultural Chemistry, Animal Science.

**ASSISTANT LECTURER** (ON CONTRACT) in Physical Education.

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Srilanka** either in person or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23X10cm in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
University of Jaffna,
Srilanka.
24th July 2001. (C/17558)



**UNIVERSITY OF JAFFNA**
**SRILANKA**
**VACANCIES**

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 28.09.2001 for the undermentioned posts.

**FACULTY OF MEDICINE**

**Senior Lecturer Grade I/ Senior Lecturer GradeII/ Lecturer (Probationary)** in Anatomy/ Biochemistry/ Community Medicine/ Forensic Medicine/ Microbiology/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Parasitology/ Pathology/ Pharmacology/ Physiology/ Psychiatry/ Surgery.

**FACULTY OF SCIENCE**

**Senior Lecturer Grade I/ Senior Lecturer GradeII/ Lecturer (Probationary)** in Botany/ Chemistry/ Computer Science/ Physics/ Mathematics & Statistics/ Zoology.

**FACULTY OF ARTS**

**Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Economics/ English Literature/ Psychology.

**Lecturer (Probationary)** in Physical Education

**Instructress** in Physical Education Grade 111.

| Post | Salary Code & Salary Scale | |
|---|---|---|
| Senior Lecturer Grade 1 | B-03(a) | Rs.21,500-8x475-25,300 p.m |
| Senior Lecturer Grade 11 | B-03 | Rs.18,325-5x475-20,700 p.m |
| Lecturer (Probationary) | B-04 | Rs.11,820-10x375-15,570 p.m |
| Instructress in Physical Education | Bs-04 | Rs.8,715-6x185-9,825 p.m |

**Note:** Allowances will also paid as approved by the University Grants Commission.

Appointees will become contributors to the University's Provident Fund, contributing 10% of their earnings and the University contributing an amount equivalent to 7% of their monthly earnings. In addition they will become contributors to the Employees Trust Fund and the University Pension Scheme Under which the University will contribute an amount equivalent to 3% and 8% of the monthly earnings of the employee respectively.

The holders of post of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II are eligible for one year sabbatical leave with full pay or Two years without pay on completion of seven years service. Those proceeding abroad on Sabbatical Leave are eligible to receive full passage for self and spouse.

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Srilanka** either in person or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23X10 cm in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
University of Jaffna,
Srilanka.
24th July 2001. (C/17557)

# குடியேற்றவாசிகளுக்கு ஆதரவளிக்க ஆஸ்திரேலிய சட்டத்தரணிகள் முடிவு

மெல்போன்,ஜூலை25

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோருபவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கு, சகல உதவிகளையும் வழங்கி ஆதரவளிக்கப்போவதாக ஆஸ்திரேலிய சட்டத்தரணிகளின் அமைப்புகள் கூறியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை, சிட்னியிலுள்ள விலாவுட் தடுப்பு முகாமில் இருந்து 23 குடியேற்றவாசிகள் தடுப்பு வேலிகளை உடைத்துத் தப்பிச் சென்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மேலும் 23பேர் இதேபோன்று தப்பினர்.

இந்த இரு சம்பவங்களுக்கும், வெளியிலிருந்த சிலர் ஆதரவளித்ததாக ஆஸ்திரேலிய அரசு தெரிவித்தது.

தடுப்பு முகாமில் இருந்து தப்பியவர்களைத் தேடும் பணியில் பொலீஸாரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் தடுப்பு முகாமில் இருந்து தப்பியவர்களுக்கு ஆதரவு அளிக்கப்போவதாக, ஆஸ்திரேலிய சட்டத்தரணிகளின் அமைப்புகள் உறுதிபடக் கூறியுள்ளன.

உரிய முறையில் புகலிடம் கோரி விண்ணப்பிக்காதவர்களும், விஸாக் காலம் முடிவடைந்த பின்னரும் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து தங்கியிருந்தவர்களும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தப்பிச் சென்றுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)



அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின்னர், முதல்தடவையாக, சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்ட ஜோர்ஜ் டபிள்யு.புஷ், பிரிட்டிஷ் மகா ராணியாரை சந்தித்தபோது எடுத்த படம்.

## பொலீஸார் அனுமதி மறுத்ததால்
# சிவாஜியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க முடியாத சுதாகரன்

சென்னை,யூலை25

மறைந்த சிவாஜிகணேசனின் பேத்தியின் கணவரும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகனுமான, சுதாகரனை சிவாஜியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக சிறையிலிருந்து வெளியே வர அனுமதிக்குமாறு கோரும் மனுவை தமிழகப் பொலீஸார் நிராகரித்தனர். இதனால் சிவாஜியின் இறுதிச் சடங்கில் சுதாகரன் பங்கேற்க முடியாமல் போனது.

சிவாஜிகணேசன் இறந்ததையடுத்து இந்த மனுவை சுதாகரனின் மனைவி தமிழகப் பொலீஸாருக்கு அனுப்பியிருந்தார்.

விளக்கமறியலில் உள்ள கைதிகளை வெளியே செல்ல அனுமதிக்கும் வழக்கமில்லை என்று கூறி பொலீஸார் மனுவை நிராகரித்தனர்.

இதற்கிடையில் அமரர் சிவாஜியின் 16ஆம் நாள் ஈமச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக தன்னை பிணையில் செல்ல அனுமதிக்கும்படி, சுதாகரன் நீதிமன்றத்தில் மனு செய்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சுதாகரனை 3 நாள் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது. கொலைமுயற்சி, போதைப் பொருள் வைத்திருந்தது உட்பட 4 குற்றச்சாட்டுகளில் சில வாரங்களுக்கு முன்னர் சுதாகரன் கைது செய்யப்பட்டிருந்தார். (ஒ-4)



ஜேர்மனியின் பொன் நகரில் காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச மாநாடு நடைபெற்ற போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவரை பொலீஸார் அப்புறப்படுத்தும் காட்சி.

# சர்வதேச மன்னிப்புச் சபை இத்தாலிய அரசுக்கு கண்டனம்

லண்டன்,ஜூலை25

உலகின் வளர்ச்சியடைந்த 8 நாடுகளின் அமைப்பான ஜி-8 இன் மாநாடு நடைபெறும் இத்தாலியின் ஜெனோவா நகரில் உலகமயமாதலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இத்தாலியப் பொலீஸார் தாக்குதல் நடத்தியதை சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையாகக் கண்டித்துள்ளது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை இது தொடர்பாக இத்தாலிய அரசுக்கு அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில்,

அமைதியான முறையில் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்திய பொதுமக்கள் மற்றும் செய்தியாளர்கள் மீது பொலீஸார் தாக்குதல் நடத்தியிருப்பதைக் கண்டிப்பதாகவும் -

வன்முறையைப் பிரயோகிக்காமல் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு பொலீஸாருக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்றும் -

குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெனோவாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 300பேர் வரை காயமடைந்தனர்; நூறுபேர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மேற்குக்கரையில் குண்டுவெடித்து பலஸ்தீனர் ஒருவர் உயிரிழப்பு

காஸா,ஜூலை25

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் 'பதாஹ்' அமைப்பினரின் தலைமையகத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இஸ்ரேலியரும், பலஸ்தீனரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இஸ்ரேல் தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணைகளை 'பதாஹ்' அமைப்பினர் தலைமையகத்தை இலக்குவைத்து ஏவியதாகவும் -

ஆனால் இலக்குத் தவறிய ஏவுகணை அருகிலிருந்த வீடொன்றைத் தாக்கியதாகவும் -

பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

ஆனால் இதனை மறுத்துள்ள இஸ்ரேலிய இராணுவத்தினர் தம் மீது தாக்குதல் நடத்த பலஸ்தீனர்கள் வெடிகுண்டு தயாரித்த சமயம் தவறுதலாகக் குண்டு வெடித்ததாகத் தெரிவித்தனர். (ஒ-4)

## புதுடில்லியில் பெரும் கொள்ளை
# 2கோடி ரூபா வங்கிப் பணத்துடன் பாதுகாப்பு ஊழியர்கள் மாயம்!

புதுடில்லி,ஜூலை25

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இரண்டு கோடி ரூபா பணத்துடன் சென்ற வாகனத்தை, அந்தப் பணத்துக்குப் பாதுகாப்பளிக்கச் சென்ற இரு பாதுகாப்பு அதிகாரிகள் கொள்ளை அடித்துச் சென்றனர்.

இந்திய ரிசேர்வ் வங்கியிலிருந்து இரண்டு கோடி ரூபா பணத்தை, கர்நாட் பிளேசில் உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக்கு நேற்று முன்தினம் எடுத்துச்சென்றபோதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. புதுடில்லியில் இயங்கும் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பணப் பரிமாற்றத்துக்கு பாதுகாப்பு வழங்கினர்.

பணத்துடன் வாகனம் சென்று கொண்டிருந்தபோது பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த வாகன ஓட்டுநரும் மற்றொரு பாதுகாப்பு ஊழியரும், வாகனத்திலிருந்த மற்றவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டி பணத்துடன் வாகனத்தை தென்மேற்கு டில்லிக்குக் கடத்திச் சென்றனர்.

பின்னர் வாகனத்திலிருந்த இரண்டு கோடி ரூபாவுடன் அங்கு நின்ற ஒரு காரில் ஏறித் தப்பிச் சென்று விட்டனர்.

வாகனத்தில் சென்ற மற்றொரு பாதுகாப்பு ஊழியரும் நான்கு வங்கி ஊழியர்களும் தற்போது பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புதுடில்லியில் இடம்பெற்ற கொள்ளைகளில் மிக அதிக தொகை கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் இது என்று கூறப்படுகிறது. (ஒ)

## உலக அரங்கில்

### நேபாளத்தின் புதிய பிரதமர்

காத்மண்டு,ஜூலை25

நேபாளத்தின் புதிய பிரதமராக ஷேர்பகதூர் தோபா நேற்று முன்தினம் பதவியேற்றார்.

பிரதமர் பதவியிலிருந்து கடந்த வாரம் ஜி.பி.கொய்ராலா பதவி விலகியதையடுத்து நேபாள காங்கிரஸ் கட்சி தோபாவை புதிய பிரதமராகத் தேர்ந்தெடுத்தது.

# நேபாளத் தீவிரவாதிகள் தாக்குதல்களை நிறுத்தினர்

காத்மண்டு,ஜூலை25

அனைத்துத் தாக்குதல்களையும் கைவிடுமாறு, நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவோயிஸ பிரிவு, தனது உறுப்பினர்களைக் கேட்டுள்ளது.

புதிய நேபாளப் பிரதமர் ஷேக் பகதூர் தோபாவின் வேண்டுகோளை ஏற்று, மாவோயிஸ தீவிரவாத அமைப்பின் தலைவர் தனது படையணிகளுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நேபாள அரசு வானொலி நேற்று முன்தினம் இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இதேசமயம், மாவோயிஸ தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் கட்டுப்பாடு காக்குமாறு, நேபாளப் பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும், புதிய பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, நேபாளத்தில் கம்யூனிஸ அரசொன்றை ஏற்படுத்தப் போராடி வரும் மாவோயிஸ தீவிரவாதிகளுக்கும், அரசுக்கும் இடையே பேச்சு நடக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகக் கருதப்படுகிறது. (ஒ-4)

# சீன நிலக்கரிச் சுரங்க விபத்தில் 77 தொழிலாளர்கள் மரணம்!

பெய்ஜிங்,ஜூலை25

சீனாவில் சட்டவிரோதமாக செயற்பட்ட நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 77 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

ஜிங்சுவ் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம் பெற்றது.

சம்பவம் நடந்த 24 மணித்தியாலயங்களின் பின்னர் 16 சடலங்கள் இடிந்த சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்டன. விபத்து நடந்த சமயத்தில் சுரங்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றியதாகவும்-

வெடி விபத்தையடுத்து பலர் சுரங்கத்திலிருந்து வெளியேறி உயிர் தப்பியதால், உயிர் சேதம் குறைந்ததாகவும்- கூறப்படுகிறது.

பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக மாகாண அரசு, சம்பந்தப்பட்ட சுரங்கத்தை மூடி 'சீல்' வைத்திருந்தது. சுரங்கத்தை மூடியதால் வேலை இழந்த தொழிலாளர்கள் ஒன்றுகூடி சட்ட விரோதமாக 'சீலை' உடைத்து சுரங்கப்பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

உலகில் மிக ஆபத்தான நிலக்கரிச் சுரங்கங்கள் சீனாவிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## மேற்காசியப் பிரதேசத்தில்
# மோதல் தவிர்ப்பு நடவடிக்கையில் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள்

ஜெருசலேம்,ஜூலை25

மேற்காசியப் பிரதேசங்களில் இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே இடம்பெறும் மோதல்களைத் தவிர்ப்பதற்காக, அமெரிக்க மத்திய புலனாய்வுப் பணியகம் - சி.ஐ.ஏயின் அதிகாரிகளை மோதல் தவிர்ப்பு நடவடிக்கை கண்காணிப்பாளர்களாக அனுமதிப்பது குறித்து பரிசீலித்துவருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏயின் இயக்குநர் ஜோர்ஜ் டெனெட்டின் முயற்சியால், மேற்காசியப்பகுதியில் கடந்த மாதம் மோதல் தடுப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஆனாலும் மேற்காசியப் பகுதியில் இரத்தக்களரிகள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்த நிலையில், மேற்காசியாவில் மோதல் தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க இஸ்ரேல் சர்வதேசப் பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று இத்தாலியில் நடந்த ஜி-8 நாடுகளின் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே, மோதல் தவிர்ப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு சி.ஐ.ஏயைச் சேர்ந்தவர்களையே பயன்படுத்துவது குறித்து இஸ்ரேல் சிந்தித்து வருவதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிமொன் பெரஸ் தெரிவித்துள்ளார்.

சி.ஐ.ஏ உறுப்பினர்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்துவதற்கு இஸ்ரேல் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், 10சி.ஐ.ஏ அதிகாரிகளை கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்த இஸ்ரேல் சம்மதித்துள்ளதாகவும் -

ஆனால் அமெரிக்காவோ, பலஸ்தீனத்தரப்போ இது குறித்து தத்தமது கருத்துக்களை வெளியிடவில்லை என்றும்- கூறப்படுகிறது.

சி.ஐ.ஏ. மீது பலஸ்தீனர்கள் என்றுமே நம்பிக்கை கொண்டிராத நிலையில், கண்காணிப்பில் சி.ஐ.ஏயினர் ஈடுபட பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகமே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)

# யாழ். பல்கலை மாணவர்கள் மீதான 4அம்ச நிபந்தனைகளைமீளப்பெறுக!

## இல்லையேல் மக்கள் போராட்டம் என்கிறார் மாவை

கொழும்பு, ஜூலை 25

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள நான்கு அம்ச நிபந்தனைகளையும் அரசு உடன் வாபஸ் பெறவேண்டு. இல்லாவிட்டால் மக்கள் போராட்டங்களை முன்னின்று நடத்துவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழகம் நியாயமான ஏதுக்களெதுவுமின்றி மூடப்பட்டு கடந்த 23ஆம்திகதி மீண்டும் திறக்கப்பட்டபோது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது விதித்துள்ள நான்கு நிபந்தனைகளும் ஏற்கக்கூடியவையல்ல.

தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டவாறான எந்த வன்முறைகளோ, வன்முறைப்போராட்டங்களோ யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவில்லை. இருந்தும் யாழ். பல்கலைக்கழகம் எதேச்சாதிகாரமாக மூடப்பட்டது. இது தவறானது.

யாழ். மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதேசங்களில் போர் காரணமாக மாணவர்களின் கல்வி பாரியளவில் பாதிக்கப்பட்டிருப்பது உண்மை. போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்த காலங்களிலும் கூட யாழ்.பல்கலைக்கழகமும் கல்வி நிறுவனங்களும் இயங்கியே வந்துள்ளன என்பதைக் குறிப்பிடவேண்டும்.

தமிழினத்தின் உரிமைக்காகவும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் குரல் கொடுப்பதற்கு மாணவர்களுக்கு உரிமையுண்டு.

அந்த மாணவர் அமைதியான முறையில் குரல் கொடுத்தனர். எழுச்சி கொண்டனர். நாகரிக முள்ள மனிதர்கள் மாணவர்கள் தம் இனத்தின் விடிவுக்குக் குரல் கொடுப்பது நியாயமே. மனித குலத்தின், மாணவர்களின் இயல்பான உணர்வுகளை அடக்கியொடுக்கப் பல்கலைக்கழக மானியக்குழுவும் அரசும் முயற்சிப்பது மனித உரிமைகளை—அடிப்படை உரிமைகளை—மறுப்பதாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களைப் பழிவாங்கும் நோக்குடன், தனது சர்வாதிகார உள்நோக்கங்களை நிறைவேற்றப் பல்கலைக்கழக மானியக் குழுவைப் பயன்படுத்தும் அரசின் தீய முயற்சிகளை நாம் எதிர்க்கின்றோம். அரசு உடன் அந்த நான்கு நிபந்தனைகளையும் திருப்பிப் பெற வேண்டுமென்று அரசையும், உயர்கல்வி அமைச்சரையும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவையும் வற்புறுத்துவோம். உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மக்கள் போராட்டங்களை நாமே முன்னின்று நடத்துவோம். — என்றுள்ளது. (உ-3)


## விற்பனைக்கு

வசந்தமாளிகைப் பந்தல் நீளம் 100 அடி விற்பனைக்கு உண்டு

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:–

**எஸ். சீவரட்ணம்**
ஏழாலை மத்தி,
ஏழாலை.

T.P. 070 - 212353 (சி/17560)


## யா/ உசன் இராமநாதன் ம. வி. மாணவர்களது கவனத்துக்கு!

O/L மாணவர்கள் விண்ணப்பிக்கவும், A/L மாணவர்கள் அனுமதி அட்டை பெறவும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இடம்: நெல்லியடியில் 'யங்றோயல்'
காலம்: 27-07-2001 வெள்ளிக்கிழமை
நேரம். காலை 10 மணி

ஐ. வரதராசா,
அதிபர்.

(90414)

## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் அன்னபூரணம்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராமலிங்கம் அன்னபூரணம் 12-07-2001 வியாழக்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் நாகேஸ்வரி, அற்புதராணி, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் நேசராணி, இந்திராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் நடராசா, பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், பூலோகசிங்கம் (மெக்கானிக்), சரவணமுத்து, பரராஜசிங்கம், வரதலிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), புவனேந்திரதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் சசீதை (யாழ். பல்கலைக்கழகம்), சசீந்திரா, சாமினி, நிருஷா. நிருபன், நிருபா, ராதிகா, பிரியந்தி, மதுவந்தி, லக்ஷி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13-07-2001) வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி தியாகராசா பாக்கியம் (சகோதரி)
சசீதை (பேர்த்தி)
பூலோகசிங்கம் (மருமகன்)
(மெக்கானிக்)

நிரந்தர முகவரி:
''லக்ஷ்மி வாசா'',
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
காலையடி,
பண்டத்தரிப்பு.

(90408)

## றோட்டரக்ட் பதவியேற்பு வைபவம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 25

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் ஏழாவது பதவியேற்பு வைபவம் உடுவில் — மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள கழக அலுவலகத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் நடைபெற உள்ளது.

றோட்டரக்ட் கழகத் தலைவர் அ. செல்வேந்திரதாஸ் தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் புதிய றோட்டரக்ட் கழகத் தலைவர் பி. கமலதாசனும் நிர்வாக சபை உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர். (ஐ-152)

## தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் இல்லாத நடைமுறையை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. கல்விச் செயற்பாடுகள் சீராக இடம்பெற சகல தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவிடயமாக சங்கத்தின் சார்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூடப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழகம் பல தரப்பட்டோரின் முயற்சியால் மீண்டும் வழமைபோல் தனது செயல்பாட்டுக்காகத் திறக்கப்பட்டு சில மணி நேரத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பி. ஆர். ஆர். என். மெண்டிஸினால் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஊடாக மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கு மாணவர்கள் சம்மதித்து ஒப்பமிடல் வேண்டும் என்ற செய்தி வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போன்றதாகும்.

எப்போதும் கல்வி நிறுவனங்களில் அரசியல் தலையீடு இருப்பது ஸ்திரமற்ற ஒரு நிலையையே ஏற்படுத்தும். இது எமது நீண்டகாலச் செயற்பாடுகளினால் நாம் பெற்றுக்கொண்ட அனுபவமாகும். மற்றைய பல்கலைக்கழகங்களில் இல்லாத நடைமுறையைப் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்மீது திணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் சகல கல்வி சார் நடவடிக்கைகளிலும் ஈடுபட பங்களிப்பு நல்குவதோடு மாணவர்களை எதிர்காலக் கல்விக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கோருவதோடு இத்தகைய செயற்பாட்டுக்கு சேர்ந்து உழைக்க எமது சங்கம் என்றும் தயாராக இருக்கிறது—என்றுள்ளது. (க)

## கட்டாக்காலி நாய்கள் நாளை அழிப்பு

வடமராட்சி, ஜூலை 25

பருத்தித்துறை பிரதேச சபையினால் கருகம்பன், மந்திகை, சாரையடி, காந்தியூர் கிராமக்கோடு ஆகிய இடங்களில் நாளை வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

இந்த இடங்களில் வதிவோர் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு புலோலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (ஐ-173)

## மக்கள் பாவனைக்கு

அரியாலை, ஜூலை 25

சுண்டுக்குளி மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள நன்னீர்ப் பொதுக்கிணறு மக்களின் குடிதண்ணீர்ப் பாவனைக்கெனத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுக் கிணறை யாழ். கிறின்கிங்ஸ் விளையாட்டுக்கழகம் சுமார் 10 ஆயிரம் ரூபா செலவில் புனரமைத்துள்ளது.

இக்கிணறு கடந்த ஞாயிறு முதல் மக்களின் பாவனைக்கெனத் திறக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புச் செய்யப்பட்டஇந்தப் பொதுக் கிணற்றைச் சுண்டுக்குளிப் பகுதிக் கிராம சேவையாளர் கே: விஜயரெட்ணம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

## ஓய்வூதியருக்கு உதவி

தென்மராட்சி பிரதேசத்தில் வன்செயல்களின்போது உடல் ரீதியில் பாதிக்கப்பட்ட தென்மராட்சி ஓய்வூதியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவரை நன்கொடையாக வழங்குவதென சங்கத்தினரால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த எஸ். சதாசிவம் என்னும் அங்கத்தவருக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக சங்கச்செயலாளர் எம். துரைராஜா தெரிவித்தார். (ஐ-117)

## நகராட்சி மன்றம், பருத்தித்துறை
## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 30. 07. 2001 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்,

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை'', என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 30. 07. 2001 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பொருள்கள் சேவைகளுக்கான வரி |
|---|---|---|---|
| 01. தாழ்வுகலட்டி வீதி திருத்த வேலை | 2500/- | 250/ | + 31. 25 |
| 02. தண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கித் தொட்டி அமைத்தல் | 1500/- | 250/- | + 31. 25 |

மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக்கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 27—07—2001 ஆம் திகதி பிற்பகல் 12. 30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்,

நா. மணிவண்ணன்
உப தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.

(சி/17553)

உதயன்

## வன்முறைக்கு வழிகாட்டும் வன்முறை

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மற்றும் அருகிலுள்ள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது நேற்று விடிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்ப் பாய்ச்சல் தாக்குதலின் விளைவுகள், பாதிப்புகள் குறித்து இப்போது பல மட்டங்களிலும் பேசப்பட்டும் ஆராயப்பட்டும் வருகின்றது.

சமாதானப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கடந்த வருட இறுதியில் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த தமது யுத்தநிறுத்தத்தை, நான்கு மாத காலத்துக்கு நீடித்த விடுதலைப் புலிகள் அதன் பின்னரும் கூட பெருந் தாக்குதல் நடவடிக்கைகளை - இராணுவச் செயற்பாடுகளை - தவிர்த்து வந்தனர்.

''அரசு பூதாகரப்படுத்துவது போன்று உடனடித் தாக்குதல் திட்டம் எதுவும் எங்களிடம் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்'' - என்று இந்த மாத முற்பகுதியில் விடுதலைப் புலிகள் தமது வன்னித் தலைமையகத்திலிருந்து விடுத்த அறிக்கையில் கூடத் தெரிவித்திருந்தனர்.

அப்படிக் குறிப்பிட்ட புலிகள், பின்னர் இப்போது ஏன் இப்படியான பெருந தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்? சமாதானப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை குழப்பும் நோக்கத்துடன்தான் இதை செய்தார்களா?

புலிகள் தரப்பில் இருந்து இத் தாக்குதல்களுக்குத் தெளிவான விளக்கம் இதுவரை வெளியாகவில்லை. என்றாலும் சில விடயங்களை ஊகிக்க முடிகின்றது.

முகமாலை - எழுதுமட்டுவாழ் பகுதியில் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு, தான் பெருத்த எடுப்பில் மேற்கொண்ட 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கை தனது கையைச் சுட்டுக்கொண்டதை அடுத்து புலிகளின் நிலைகளின் மீதான வான் தாக்குதல்களைப் பாதுகாப்பு அமைச்சு இடைநிறுத்தி வைத்திருந்தது.

இந்தச் சமயத்தில் - கடந்த மாத இறுதியில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது பொறுப்புகளை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைத்து விட்டு தனிப்பட்ட விஜயமாக லண்டன் சென்றிருந்த சமயம், சில உளவுத் தகவல்களைக் காரணம் காட்டி, குடாநாட்டில் புலிகளின் நிலைகள் மீது பெருத்த எடுப்பிலான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு உத்தரவிட்டிருந்தார் பிரதமர்.

அந்தத் தாக்குதல்களினால் சீற்றமடைந்த புலிகள், அதுதொடர்பாகத் தமது கடும் விசனத்தையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தி வன்னியிலுள்ள தமது தலைமையகத்திலிருந்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டிய விடயங்கள் சிலவற்றை, இப்போது கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னணியில் மீள உருப்போடுவது பொருத்தமானதாகும்.

''புலிகளின் படைகள் மீது தற்போது நடத்தப்படும் ஆத்திரமூட்டும் வான் தாக்குதல்கள், சமாதான முயற்சிகளை சேதப்படுத்திவிடும்; சீர்செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

''தமிழர் தாயகத்தில் யுத்த நிலைமையை மோசமடையச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் தவறான உததகளினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளுக்கு முழுப்பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்பதை ஸ்ரீலங்கா அரசு உணரவேண்டும்'' - என்று புலிகள் அப்போது தெரிவித்திருந்தனர்.

ஸ்ரீலங்கா அரசின் அந்த விமானத் தாக்குதல்கள் குறித்தும் அதற்கான காரணங்கள், நோக்கங்கள் குறித்தும் அப்போது கொழும்பில் இருந்த இந்திய, அமெரிக்கத் தூதுவர்களை அழைத்து அவர்களுக்கு நேரில் விளக்கமளித்திருந்தார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். அப்படியிருந்தும் -

இந்த விமானத் தாக்குதல்கள் குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தது. அமெரிக்கா கவலையும் கண்டனமும் வெளியிட்டது. அத்தோடு ''வன்முறை வன்முறைக்கே வித்திடும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்'' - என்றும் அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுக்கு பகிரங்கமாகத் தெரிவித்திருந்தது.

இப்போதைய நிகழ்வுகளைப் பார்க்கும்போது வன்முறை வன்முறைக்கு வழி செய்துள்ளது என்று கொள்ளலாமா?

## யாழ்.லீக்கின் ஏற்பாட்டில் உதைபந்தாட்டப் பயிற்சி

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் சிரேஷ்ட அணிக்கும் 19 வயதுக்குட்பட்ட அணியினருக்கும் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் எம்.பிரான்சிஸ் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து யாழ். வந்துள்ள பிரான்சிஸ் மூலம் யாழ். மாவட்ட வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்க இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் வீரருமான பிரான்சிஸ் 10 வருடங்களுக்கு மேலாக இலங்கை உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர். 1970 இல் ஆசிய இளைஞர் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தவறிவிட்ட கைக்கடிகாரம்

கந்தர்மடம் பகுதியில் வீதியோரம் காணப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரத்தை தவறவிட்டோர் கோயில் வீதியில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாட்டு நடப்பு

''எழுபது வயதானை வானில்
எங்கை கொண்டு போறியள்?
அழுதழுது கெஞ்சு தெல்லோ
அடையாதையுங்கோ மறியலிலே!''
பொழுது புலரயிக்கை
பூப்பிடுங்கப் போனவளை
பழுதாக்கிப் போட்டானாம்
பாவம் அவளுக்குப் பதினாலும்
ஆகவில்லை!

*- விகடகவி -*

# ஜனநாயகத்தின் மறைவை ஒட்டி நாட்டு மக்கள் கடும் துயரம்

**நாடாளுமன்ற அமர்வை இரண்டு மாதங்களுக்கு ஜனாதிபதி ஒத்திவைத்த செயலானது நாட்டில் ஜனநாயகத்தைப் படுகொலை செய்ததற்கு ஒப்பானதாகும் எனவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் 1978ஆம் ஆண்டு அரசமைப்பைக் கண்டித்துக் கொண்டு அதையே தனது தேவைகளுக்கு ஜனாதிபதி பயன்படுத்துகிறார் எனவும் 15.07.2001 திகதிய 'ஞாயிறு லக்பிம' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**2001** ஜுலை 11ஆம் திகதி புதன கிழமை எமது நாட்டின் அரசியல் பற்றி அக்கறை கொண்டுள்ள அனைவருக்கும் ஒரு துக்ககரமான நாள் ஆகும். அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தோல்வியடையக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்ட வேளை ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்து எவரும் எதிர்பாராத மக்கள் கருத்துக் கணிப்பிற்கு நாள் தீர்மானித்தது முழு நாட்டையுமே குழப்பநிலைக்கு இட்டுச்சென்றது. அனைவரும் தங்களுக்குத் தெரிந்தவர்கள் மற்றும் தெரியாதவர்களுடன் 'என்ன நடக்கப்போகிறது' என வினாவெழுப்பினர்.

### கெனடியின் படுகொலை

இவ்வேளையில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோன். எப்.கெனடியின் படுகொலை தொடர்பாக அந்தனி சம்மர்ஸ் (ANTHONY SUMMERS) எழுதிய ''சதி ஆலோசனை (CONSPIRACY)'' என்னும் நூலில் குறிப்பிட்ட விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. 1963 நவம்பர் மாதம் 22ஆம் திகதி கெனடி சுடப்பட்டார் என்ற செய்தியை ஓடிக்கொண்டிருந்த தத்தமது கார்களில் பொருத்தப்பட்டிருந்த வானொலியில் கேள்வியுற்றதும் தங்கள் வாகனங்களை நிறுத்தி - வீதியில் இறங்கித் தெரிந்த, தெரியாதோர் அனைவருடனும் தங்கள் சோகத்தைப் பகிர்ந்தனர்'' அமெரிக்க ஜனநாயகத்தின் வடிவமென ஏற்றுக்கொண்ட கெனடியின் மறைவு அமெரிக்க மக்களை மாத்திரமன்றி வேறு நாடுகளில் வாழும் மக்களையும் துன்பத்தில் ஆழ்த்திய போது அவர்களும் தெரிந்த மற்றும் தெரியாதோருடன் கலந்து தங்களது துயரங்களைப் பகிர்ந்தனர். கடந்த புதன்கிழமை (11.07.2001) இந்நாட்டு மக்களும் மேலே கூறிய சம்பவத்தை ஒத்த சோகத்தை மற்றவர்களுடன் கலந்து பகிர்ந்தனர் எனக் கூறின் அது மிகையாகாது. அமெரிக்காவில் பலியானவர் ஜனாதிபதி கெனடி. ஸ்ரீலங்காவில் பலியானது நாட்டின் ஜனநாயகம்.

ஜனாதிபதியினால் நாடாளுமன்ற அமர்வு இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சம்பவமானது அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தைத் தாமதப்படுத்துவதற்கே என்பதை சிறுபிள்ளைகளால் கூடப் புரிந்துகொள்ள முடியும். நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்ததால் நம்பிக்கையில்லாப் பிரேரணை செயலற்றதாகிவிடாது. எனவே செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்றம் கூடும் போது அது தொடர்பான விவாதத்திற்கான நாளை ஒதுக்குவதைத் தவிர்க்க அரசால் எதையும் செய்ய முடியாது. ஆகவே மக்கள் கருத்துக்கணிப்பு என்ற போர்வையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததால் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தையும் வாக்கெடுப்பையும் சற்றுப் பிற்போடவே அரசால் முடிந்துள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறைகளைக் காலங்கடத்தி ஆதாயம் பெறுவதற்கு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கான அதிகாரங்களைப் பயன்படுத்திய சம்பவமும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனக் கூக்குரல் இடுவதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செயற்பாடுகளாகும்.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனக்கூறியே இந்த அரசு 1994இல் ஆட்சிக்கு வந்தது. பதவிக்கு வந்து ஓர் ஆண்டுக்குள் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம் என அளித்த உறுதியின் அடிப்படையிலேயே அவ்வேளையில் ஜே.வி.பி. தனது ஜனாதிபதி வேட்பாளரை வாபஸ்பெற்றது. தான் ஜனாதிபதிப் பதவியை வகித்தாலும் அந்தப் பதவிக்கான அதிகாரங்களை ஒருபோதும் பயன்படுத்த மாட்டேன் என ஜனாதிபதி சந்திரிகா கூறியது ஒருமுறை, இருமுறை அல்ல ஜனாதிபதி சந்திரிகா இரண்டாவது முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை ஜனாதிபதி மாளிகையில் வாழவில்லைத்தான்.

என்ன காரணத்தாலோ இறுதியில் ஜனாதிபதி மாளிகைக்குத் தனது வாழ்விடத்தை மாற்றிக்கொண்ட ஜனாதிபதி, அப்பதவிக்கான அதி உச்ச அதிகாரங்களைப் பயன்படுத்தி வருகிறார். கடந்த மாதம் நிட்டம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதியால் எள்ளிநகையாடப்பட்ட 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு விதிகளைப் பயன்படுத்தியே தற்போது நாடாளுமன்றத்தின் அமர்வை ஒத்திவைத்துள்ளார். இது 'ஊருக்கு உபதேசம் எனக்கில்லைத் தோழி' என்பதற்கு ஒப்பானதாகும்.

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கான அதிகாரங்கள் ஜனநாயக வழிமுறைகளுக்கு ஒவ்வாதவை எனக் கூறிய ஜனாதிபதி, இறுதியில் மக்களின் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படவிருந்த ஜனநாயக வழியில் அமைந்த நடவடிக்கைகளை (நம்பிக்கையில்லாப் பிரேரணை) காலங்கடத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் மக்கள் கருத்துக்கணிப்பை மேற்கொண்டு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததும் தேவையானதுமான புதிய அரசியல் அமைப்பு தேவையா என மக்களின் கருத்தை அறிவதில் பலன் ஏதும் உண்டா?

**தமிழில்: கஜனி**

மக்களுக்குப் புதிய அரசமைப்புத் தேவையா அல்லது தேவையற்றதா என்பது வேறு பிரச்சினை. பொது மக்களுக்கு புதிய அரசமைப்பு ஒரு வேளை தேவைப்படினும் அரசுக்கு தேவையானது அதுவல்ல. பதிலாக அரசுக்குத் தேவையானது தற்போது நடைமுறையிலுள்ள 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பேயாகும். நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தின் அமர்வை பிற்போட்டதன் மூலம் இதை நாட்டிற்கு உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே புதிய அரசமைப்பை அரசு கொண்டுவந்தாலும் அது தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பைக்காட்டிலும் ஜனநாயக விரோத செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்குமே தவிர அதில் நல்ல விடயங்கள் இருக்காது என்பதே மக்கள் மனதில் உருவாகக் கூடிய சந்தேகமாகும். கொண்டுவர உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பு எத்தகையது எனத் தெளிவுபடுத்தாது அதற்கான அனுமதியை மக்களிடம் கோருவது அதற்காகவே என்ற எண்ணம் மக்கள் மனதில் உண்டாவது புதுமையான விடயம் அல்ல. ★

## நாளை

ஆடி 10
வியாழக்கிழமை
திதி: ஷஷ்டி
நண்பகல் 12.11 வரை.
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் 1.50 வரை.
ஷஷ்டி விரதம்
கரிநாள்
சுபநேரம் : 7.32 - 8.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பொறாமையில் இருந்து அற்பத்தனம் தோன்றுகிறது. சகிப்புத் தன்மையில் இருந்து பெருந் தன்மை தோன்றுகிறது.

# தான் ஏற்ற பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்தவர் சிவாஜி

## நடிப்பின் மாமேதையின் இழப்பு ஈடுசெய்ய முடியாது

அமரராகிவிட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான் நடித்த பாத்திரங்கள் அனைத்துக்கும் உயிர் கொடுத்தவர். உலகத்தில் நடிப்புக்கு இனி அவரைப்போல் ஒருவர் பிறக்கவும் மாட்டார். அவரது இடத்தை ஒருவரும் பிடிக்கவும் முடியாது. நடிப்பின் மாமேதையின் மறைவு உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

- இவ்வாறு நாட்டுக் கூத்துக் கலைஞர் நா.புவனசுந்தரம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, சிவன் கோயிலடி ஞானவைரவர் ஆலய முன்றலில் வட்டுக்கோட்டை கலைவாணி கலையகத்தினரின் ஏற்பாட்டில் மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

நடிகர் வே.அருமைத்துரை தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் நா.புவனசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் தனது நடிப்பினால் மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். இன்று அவர் மறைந்தாலும் என்றும் அவர் இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டே இருப்பார். அவருடைய வரலாறு படைத்த சினிமாப் படங்கள் என்றும் உலகத்தில் ஓடிக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை - என்றார்.

அமரர் சிவாஜியின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான மக்களினால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மு.வேதாந்தசிவம், ஐ.சௌந்தரராசா உட்பட இன்னும் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். நடிகர் சிவாஜிகணேசனின் முதற் படமான 'பராசக்தி' உட்பட இன்னும் பல சினிமாப் படங்களும் காண்பிக்கப்பட்டன. (ஐ-175)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



யாழ்ப்பாணத்தில் காணப்படும் மிதிவெடிகளில் ஒரு வகை.
(அதன் அளவை மதிப்பிடுவதற்காகப் படத்தில் தேங்காய் வைக்கப்பட்டுள்ளது)

# சொல்லால் வர்ணிக்க முடியாத சுந்தர வேலனுக்கு இன்று கொடி!

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" இது தவயோகி யோகர் சுவாமிகளின் கூற்று. ஆம்! நல்லூர் முருகப் பெருமானின் அருள் இருப்பின் எதுதான் நிறைவேறாது. சொல்லால் வர்ணிக்க முடியாத சுந்தர வேலன் எமது அல்லல் அகன்ற நல்லையிலே அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்றான். அருள் சுரக்கும் அவனது கொடியேற்றங்காணும் நல்ல நாள் இன்றாகும்.

### புனித நல்லூர்

நற்பதி நல்லூர்: புனித நல்லூர்: தெய்வீக அருள் சுரக்கும் நல்லூர்: ஆட்சித் தலைநகர் நல்லூர்: குமரக் கோட்ட நல்லூர்: கலைமலி நல்லூர்: ஞான ஒளி வீசும் நல்லூர் எனப் பலவாறு அதனை அழைக்கலாம். ஆடி மாதத்தில் அதனை நாடி கோடிக்கணக்கான அடியார்கள் ஓடி வருவது அதன் ஒப்பற்ற புகழை உணர்த்துவதாகும். இதன் கிழக்கிலே வெயிலுகந்த பிள்ளையார், வடக்கிலே சட்டநாதர் சிவன், தெற்கிலே கையிலாயநாதர், மேற்கிலே வீரமாகாளி அம்மன் ஆகிய ஆலயங்கள் அமையப் பெற்றமை நல்லூரைப் புனித நகராகக் கருதிப்போற்ற வழிவகுத்துள்ளது.

சமூகஜோதி
**கா.கணேசதாசன்**

ஆகவே ஆலயச் சூழலில் நுழைந்ததும் நாம் பிற விடயங்களில் மனதைச் செலுத்தாது புனித தூய்மையான சிந்தனையுடன் முருகப் பெருமானின் திருவுருவத்தை தரிசிப்பதே எமது கண்கள் பெற்ற பலனாகவும், அவரது புகழைக் கேட்பதையே எமது செவிகள் பெற்ற பேறாகவும் அவரை ஒருமுகமாகக் கை கூப்பித் தெழுவதையே நமது கைகள் செய்த பயனாகவும் அவரது தொண்டிற்கு ஆட்படுவதையே எமது மனம், மொழி, மெய் பெற்ற பயன்களாகவும் கருதி



வழிபடவேண்டும். நல்லூர் வேலனது திருவருள் தானே எம்மை நாடிவரும்.

### நல்லூர் ஆலயச் சிறப்பு


நலலூர் ஆலயத்தின் மிகச் சிறந்த பரிபாலனம், நேரம் தவறாத பூசைக் கிரமம், சகலரிடமும் மிகக் குறைந்த வகையில் அர்ச்சனை, அபிடேகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுதல், கலையழகு மிக்கவாறு கட்டடம் புதுப்பித்தல், அலங்காரச் சாத்துப் படிகள், தேரடிச் சித்தர்களின் வரலாறு, கோயிலின் சூழலில் நல்லைத் திருஞானசம்பந்த ஆதீனம், துர்க்கா சுந்தரி மகளிர் இல்லம், சடையம்மா மடம் முதலாம் திருமடங்கள் அமைந்திருத்தல், யாழ்ப்பாண மாநகர சபையினர் மற்றும் இலங்கை முதலுதவிச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் படைப்பிரிவு, யாழ். பிரபல பாடசாலைகளின் மாணவர் தொண்டர் பிரிவு, இந்து இளைஞர் பேரவையினர் போன்றோர் இணைந்து வழங்கும் நற்சேவைகள். பத்திரிகைகள், வானொலி போன்ற மக்கள் தொடர்புச்சாதனங்கள் கோயில் திருவிழாக்களுக்கு அளிக்கும் முதன்மை. இவ்வாறு பல சிறப்புக்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

### வீதியெங்கும் விழாக்கோலம்

நல்லூர்க் கந்தனுக்குக் கொடி ஏறிவிட்டால் ஊரெல்லாம் வீதி தோறும் விழாக் கோலம் பூண்டு விடும். நல்லூரான் உற்சவம் நம் தமிழர் தம் வாழ்வைப் பேணும் முக்கிய காலமாகக் கருதி, தமது பாரம்பரிய கலை கலாசாரத்தைக் காக்க முற்படுவர். வீதிதோறும் வெண் மணல் பரப்பி, நீர் தெளித்து, வாசல் தோறும் மாவிலை தோரணம் கட்டி, நிறைகுடம் வைத்து, தண்ணீர்ப் பந்தல அமைத்து அடியார்களுக்கு தாக சாந்தி வழங்குவர். பஜனைக் கோஷ்டி ஒருபக்கம்: அங்கப் பிரதட்சணம் செய்வோர் மறுபக்கம்: தூக்கக்காவடி பாற்காவடி கரகம் ஆடுவோர் ஒருபக்கம் என்று வீதியெல்லாம் தெய்வீகக் களை காணப்படும். ஆசார சீலர்களாக மக்கள் கூட்டம் வீதிவழியே செல்லும் காட்சி மனதில் மகிழ்ச்சியைத் தரும். மக்கள் அனைவரும் தங்கள் உள்ளங்களில் உள்ள கோபம், காமம், அழுக்காறு, அவா முதலிய அசுத்தங்களை அகற்றி உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி முருகனை உள்ளங்களில் இருத்தி சாந்தம், சமாதானம், நிம்மதி, அன்பு என்ற உள்ளொளி கமழ, "முருகா! சரவணபவனே வேலவா!" என்று கூறியபடி செல்லும் காட்சி ஊரெங்கும் மக்கள்மத்தியில் பக்தி உணர்வை ஏற்படுத்தும்.

தமிழர்களாகிய எம்மவரின் புனிதப் பெருநாள்களே நல்லூர் உற்சவ திருவிழாத் தினங்களாகும். இப்புனித தினங்களிலே அனைவரும் ஒன்று கூடி நாம் அனைவரும் நன்றே வாழப் பிரார்த்திக்க வேண்டும். ஒன்றுபட்ட பிரார்த்தனை நமது நாட்டில் நிம்மதியையும் சமாதான வாழ்வையும் ஏற்படுத்தும். நல்லூர்க் கந்தனிடம் அழுது மனமுருகி அவனிடம் வயப்பட்டால் எமக்கு சமாதான சுகவாழ்வை அவன் தராமல் விடுவானா? ★

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



## கொடி ஏற்றி மிடிபோக்கையா!

கொடியேற்றி மிடிபோக்கி விடிவாக்கையா!
குடிமக்கள் அடிமைக்காம் மடிபோக்கையா!
நெடிதேற்றி அடியாரை வடிவாக்கையா!
நொடிவற்றுப் படிமீது பிடித்தேற்றையா!
சடிதாக வடிவோடு செடிலாடையா
சமருடு எமைக்காக்கும் பலம் சேரையா
வடிவேலின் பிடியேற்றுக் கடிதேகையா
வெடியாளர் வெருண்டோட விளையாடையா!

- முருகனடியான்.

## மென்மலர் பாதம் வீழ்வோம்!

அச்சமும் துயரும் மிஞ்சி ~ மக்கள்
அழுத கண்ணீர் வீதியெல்லாம்
நிச்சயம் நிலத்தில் ஊறி ~ நிலமகள்
நெகிழ்ந்து விம்ம
பச்சைப்புல் படர்ந்தேயன்றி ~ பக்தர்
படுதுயர் குறையவில்லை
துச்சமாய் சூரனை வதைத்து ~ தேவர்
துயரது களைந்த வேலா!
இச்சமர் நிறுத்தி மண்மேல் ~ இன்ப
ஈழத்தில் வாழ வைத்தால்,
மெச்சியே தமிழர் நாங்கள் ~ உன்தன்
மென்மலர் பாதம் வீழ்வோம்.

- விகடகவி.

## வடிவேலன் கொடியேறுது!

வேலெடுத்து வினையோடப் போயழிய
வெற்றி கொண்டசூரர் கொன்றவா!
தாளெடுத்துத் திருநல்லைப் பதியினிலே
தங்கியருள் புரிய நின்றவா!
பாழ்படுத்தி யுயிர்போயொழியுஞ் சமர்
பாதி வழியினிலே ஓயுமோ?
வாழ்வளிக்கும்வடி வேலன் கொடியேற ~ தமிழர்
வாழ்வில் இன்பநதி பாயுமா?

- அளவையூர்ச் சேந்தன்.

## நல்லையில் கொடி ஏறுகின்றான்

முடி சுமந்த தமிழ் முருகன்
நல்லையில் கொடி ஏறுகின்றான்
அடி விழுந்த நேரம் முருகன்
நல்லையில் விழி சிமிட்டினான்!

பனி விழும் நிலா மண்ணில்
தனி வேல் காட்டி நின்றான்
இனி வரும் மகிழ் உறவில்
கனி மொழி காட்டி நிறைவான்!

வெள்ளித் தம்பத்தில் விளக்காய் மின்னுவான்
வெள்ளிக் கம்பத்தில் உழைப்பாய் தன்னுவான்
புள்ளி மயிலுடன் கொடியேற்றிப் பறப்பான்
புன்னகை எழிலுடன் அடிதாங்கிக் கதைப்பான்!

- நல்லை அமிழ்தன்

## நன்னாளில் கொடியேற்று நல்லூர்கந்தா!

நல்லூர்ப் பதியினிலே நாடி வந்துறைந்தவனே
நல்லைக் கந்தன் என்ற திருநாமம் நிறைந்தவனே
தொல்லைகள் கொண்ட போர் தொடர்கின்றதேயிங்கு
தொடர்ந்து நாம் இடம்பெயர்ந்து செல்வதெங்கு?
எல்லாப் பக்கத்தாலும் ஏற்கிறோம் அழிவை
எங்கள் துயர்களையும் நீயே ஒழித்துவை
நல்லதொரு தீர்வு கிடைக்கவே உமைமைந்தா ~ நீ
நல்லூரில் நன்னாளில் கொடியேற்று கந்தா!

- கோண்டாவிலூர் து.ஜேந்திரன்

## தமிழ் மண்ணில் விடிவு வரக் கொடியேற்று!

எழிலான நல்லூரில் கொடியேற்று!
எல்லோரும் வாழக் கொடியேற்று!
பொழிலான மயிலேறி கொடியேற்று!
புதுவாழ்வைத் தமிழ் காணக் கொடியேற்று!
அருளான வேலேந்தி கொடியேற்று!
அல்லல்கள் தீர்த்திடவே கொடியேற்று!
தமிழாலே அர்ச்சிப்போம் கொடியேற்று!
தமிழ்மண்ணில் விடிவுவரக் கொடியேற்று!

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

# ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய!



இன்று புதன்கிழமை. நல்லூர் முருகப்பெருமானது திருக்கோயில் கொடியேற்றம் நடைபெற இருக்கின்றது. அன்று தொடக்கம் இருபத்தைந்து நாள்களுக்கு யாழ்ப்பாணம் தூய்மை நிலவும் நாடாக முருகனை நினைந்து விழாக் கொண்டாடித் திளைக்கும் நாடாக விளங்கப்போகின்றது. இச்சமயத்தில் முருகனைப் பற்றிச் சிந்தித்து திரு நல்லூர்க் கோயில் வரலாற்றினை நினைவு கூர்வது பொருத்தமுடையதாகும்.

யாழ்ப்பாணத்தில் சிற்றரசு செய்து கொண்டிருந்த சயசிங்கை ஆரியனிடம் பாண்டியன் துணை கேட்க, சிற்றரசன் பாண்டியனுக்குத் துணையாகப் படையுடன் சென்று சோழனை வென்று பாண்டியனுக்கு அரசை நிலையாக்கிக் கொடுத்தான். பாண்டியன் பதிலாகப் பரிசில்கள் கொடுத்தான். பாண்டியனின் உத்தம மந்திரியாகிய நீலகண்ட ஐயரையும் பெற்றுக்கொண்டு பல தலங்களையும் தரிசித்துப் பின் திருச்செந்தூர் சென்று வணங்கி மீண்டான். யாழ்ப்பாணம் வந்ததும் நீலகண்ட ஐயருக்குப் புவனேகபாகு எனத் திருநாமமிட்டுத் தன் காரியங்களை நடத்த வைத்தான். புவனேகபாகுவைக் கொண்டே யாழ்ப்பாணத்தில் புதிய நகரையும் நல்லூர் இராசதானியையும் நல்லூரில் குலவிய கந்தனுக்கு ஓர் ஆலயத்தையும் நூதனப் பிரதிஷ்டையாகச் செய்வித்தான்.

ஈழநாட்டின் தெற்கே கடலால் மூடப்பட்டிருக்கும் மகேந்திரபுரியிலிருந்து அரசுபுரிந்த சூரனின் துன்பங்களுக்கு ஆற்றாத தேவர் சிவனுக்கு முறையிட சிவன் "உம் துன்பந் தீர ஒரு மதலையைத் தருவேன்" என்றார். அவருடைய ஐந்து முகத்தோடு அதோ முகமும் சேர்ந்த ஆறு முகங்களிலும் உள்ள நெற்றிக் கண்களிலிருந்து ஆறு அக்கினிப் பொறிகள் பாய்ந்தன. அவற்றின் வெப்பத்தைத் தாங்காது தேவர் சிவனிடம் முறையிட, சிவன் பொறிகளின் வெப்பத்தைக குறைத்து வாயுவையும் அக்கினியையும் நோக்கி, 'இவற்றை எடுத்து கங்கையில் விடுங்கள்: கங்கை சரவணத்திற் சேர்க்கும் - என்றார். அவர்களும் அப்படியே செய்தனர். பின்னர் உமை அம்மை மூலம் ஆறு குழந்தைகளையும் ஒரே குழந்தை ஆக்கினார். அதற்குத் துணையாகப் பல வீரர்களையும் ஆக்கினார். ஆறு முக குமரன் திருவவதாரம் பற்றிய செய்யுளை இங்கு குறிப்பிடுவாம்.

*"அருவமும் உருவமாகி அனாதி*
*யாய்ப் பலவாய் ஒன்றாய்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிளம்ப*
*தோர் மேனியாகக்*
*கருணை கூர் முகங்களாறும் கரங்கள*
*பன்னிரண்டுங் கொண்டே*
*ஒருதிரு முருகன் வந்தாங்கு*
*உதித்தனன் உலகமுய்ய"*

முருகப்பெருமானுடன் மாறுபாடில்லாது விளங்கும் தடைப்படாத அறிவே ஞானசக்தி என்னும் வேலாம். பராசக்திக்கு மூன்று விதத் தோற்றமுண்டு. அவை இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி என்பனவாம். ஞானசக்தி வேல், இச்சா சக்தி வள்ளியம்மன், கிரியா சக்தி தெய்வானை அம்மன்.

ஆறுமுகக் குழந்தை வேலன் ஞானவேலைக் கையில் ஏந்திக் கொண்டு ஆணவம் பிடித்த சூரனை அடக்குவதற்காக ஆறுமுகத்துடனும் பன்னிரு கைகளுடனும் திருச்செந்தூரில் கடற்கரையில் கோயில் கொண்டு அமர்ந்திருந்தார். இந்தக் காட்சியையே புவனேகபாகு தரிசித்து அதைப்போலவே நல்லூர்க் கந்தனுக்கும் கோயில் கட்டுவித்திருத்தல் வேண்டும். புவனேகபாகு இந்த ஆறுமுக நிலையை நன்குணர்ந்து அதையே நல்லூரில் நூதன முறையில் பிரதிஷ்டை செய்வித்தார். இதைக் குறிக்கும் ஒரு செய்யுளைத் தருவாம்.

*"இலக்கிய சகாப்தம் எண்ணூற்று*
*எழுத்து நான்கில்*
*அலாதரி சங்க போதியாய்*
*புவனேகபாகு*
*நலமுறும் யாழ்ப்பாணத்து*
*நகரிகட்குவித்து*
*நல்லூர்க் குலவிய கந்தனுக்கு*
*கோயில் ஒன்று அமைப்பித்தானே"*

நல்லூர்க் குலவிய என்பதனால் நல்லூரிலே பிரகாசித்த குமரன்

முத்த சட்டத்தரணி
**எஸ்.கனகரத்தினம்**

கதை, தெளிவாகக் கோயில் கட்ட முன்னரும் இந்த நல்லூரில் நல்லோர்கள் வாழ்ந்து அறிவு நிலையை உடையவர்களாய் கந்தசுவாமியை வணங்கி இருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. நூதன முறையில் பிரதிஷ்டை செய்தார் என்றமையின் இப்போது நல்லூர் ஆலயம் அமைந்திருக்கும் முறையே புவனேகபாகு காலத்திலும் இருந்திருத்தல் வேண்டும். மூலஸ்தானத்தில் அறிவான ஞானவேல் உருவமும் தெற்கு நோக்கி ஆறுமுகக் கடவுள் உருவமும் அமைந்திருத்தல் வேண்டும். இன்றும் கட்டியம் சொல்கையில் திரிசங்கு புவனேகபாகுவின் பெயர் போற்றப்படுவதால் அவர் இயற்றிய முறையிலேயே தற்போதைய ஆலயமும் அமைந்திருக்கின்றது என்பது பொருத்தமானதாகும்.

இக்கோயில் பறங்கியரால் இடிக்கப்பட்ட பின்பு அரச பரம்பரைக்குத் தொடர்பான தொண்டை நாட்டு வேளாண் மரபில் வந்த மாப்பாண முதலியார் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணை நஞ்சாக்கும் உரப்பயன்பாடு; கட்டுப்படுத்தப்படாவிடில் பேராபத்து!

## மண் பரிசோதனை வசதி எப்போது இங்கு கிடைக்கும்?

யாழ்ப்பாணத்தில் கல்சியம் செறிந்த செம்மஞ்சள் 'இலற்றசோல்' மண் அதிகமான மேட்டுநிலப் பிரதேசங்களில் காணப்படுகின்றது. இதிலுள்ள கல்சியம் மண்ணின் மணியுருவாதலைத் தூண்டுவதால் பயிர்களுக்குத் தேவையான கனியுப்புகள் மண்ணில் போதியளவு செறிந்துள்ளன. மனிதனாலோ அன்றிச் சூழலாலோ இடையூறு ஏற்படாதவரையில் இப்பிரதேச மண் அநேக மேட்டு நிலப்பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்றதாகவுள்ளது. மிக நீண்டகாலமாக முறையான பராமரிப்பின்றி தற்போது பயிர்ச்செய்கை தொடரப்படுவதால் மண்வளம் குன்றிக் காணப்படுகின்றது. இம்மண்ணில் வளரும் பயிர்கள் இலகுவில் நோய், பீடைத்தாக்கங்களுக்கு உட்படுவதாலும் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையில் உச்ச இலாபத்தைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர்.

திருமதி கி.சிவதீபன்
கமநல அபிவிருத்தி
உத்தியோகத்தர், பளை.

நமது முன்னோர்கள் சேனைப் பயிர்ச்செய்கை செய்த காலங்களில் உயர் விளைச்சலைப் பெற்றிருந்தமை இயற்கையான இம்மண்ணின் வளத்திற்குச் சான்றாகும். அதனைத் தொடர்ந்து செயற்கை உரங்கள் பற்றி அறிந்திராத காலங்களில் அவர்கள் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பசுந்தாட் பசளை, கூட்டெரு, கூட்டுப்பசளை போன்றவற்றைத் தயாரித்து அவற்றை உபயோகித்து தமது மண்ணை வளப்படுத்திப் பயிர் செய்தனர். குறைந்த செலவுடன் நிறைந்த பயனைப் பெற்றிருந்தார்கள். தற்போது யாழ்ப்பாணத்தில் பயிர்ச்செய்கை பெரும்பாலும் செயற்கை உரங்களை நம்பியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இயற்கைப் பசளைகளை மண்ணுக்கு நாம் இடும்போது அவை மண்ணுடனும் நீருடனும் சேர்ந்து தாக்கமுற்று களிக்கூழ் பொருள்களை (Colloids) உருவாக்குகின்றன. இக்களிக்கூழ் பொருள்கள் பயிர்களுக்குத் தேவையான பெரும்பாலான 'கற்றயன்களைத் தம்மகத்தே பிடித்து வைத்திருக்கின்றன. இவை மண்ணில் அதிகளவு காணப்படும் போது அம்மண்ணின் 'கற்றயன்' பரிமாற்றீட்டுக் கொள்ளவு (Cation Exchange Capacity) அதிகமாகக் காணப்படும். இந்நிலையில் இம்மண்ணில் வளரும் பயிர்கள் தமக்குத் தேவையான கனியுப்புகளைப் பெற்றுக்கொள்ளும்.

### மண்ணின் நீர்பற்று இயல்பு

எமது மண்ணின் சீதோஷணம் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டுக்கு ஏற்றதாக இருப்பதால் மண்ணிற்கு நாம் இயற்கைப் பசளைகளை இடும்போது பிரிகையாக்கிகளின் தொழிற்பாட்டால் சேதனப்பொருள்கள் அசேதனப் பொருள்களாக மாற்றப்படுகின்றன. இவ்வசேதனப் பொருள்களே பயிர்களுக்குத் தேவையான கனியுப்புகள். இப்பிரிகையாக்கிகளின் தொழிற்பாட்டின் போது வெளியிடப்படும் வெப்பம் இம்மண்ணிலுள்ள களைகளின் விதைகளையும் பயிர்களுக்கு நோய் ஏற்படுத்தக் கூடிய நுண்ணங்கிகளையும் அவற்றின் வித்திகளையும் அழித்து விடும். எனவே இவ்வகையிலும் பயிர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கிடைக்கின்றது. அத்துடன் மண்துணிக்கைகள் நெருக்கமாகப் பிணைக்கப்படுவதால் மண்ணினால் நீர்பற்றி வைத்திருக்கும் இயல்பும் அதிகரிக்கின்றது.

### மண் பரிசோதனை நீண்டகாலம் இல்லை

யாழ்ப்பாணத்து மண்ணில் மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நிலையிலேயே பன்னெடுங் காலமாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்ட அளவென்றில்லாமல் எழுந்தமானமாகச் செயற்கை உரங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இச்செயற்கை உரங்களை அதிகமாகப் பயன்படுத்தும்போது ஏற்படும் பக்க விளைவுகளால் மண்வளம் பாதிக்கப்படும். அமோனியம் சல்பேற்று மண்ணுக்கு இடும்போது அதிலுள்ள அமோனியம் அயன் பயிரால் உறிஞ்சப்பட மீந்து நிற்கும் சல்பேற்று அயன்கள் மண்ணில் செறிவடையும்போது மண் அமில மாக்கப்படும். அமில மண்ணில் பயிராக்கப்படும் பிறசிக்கா இனம் (முட்டைக் கோவா, பூக்கோவா) பயிர்கள் இலகுவில் பங்கசுத் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படலாம். யூரியாவை அதிகளவு மண்ணுக்கு அளிக்கும்போது அதில் மாசாக உருவாக்கப்படும் 'பைரூவற் (Biuret) எனும் நச்சுப் பொருள் தாவரங்களுக்கும் மண்ணில் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளுக்கும் நஞ்சாகின்றது. 'மியூறியேற் ஒப் பொட்டாஸ்' (MOP) அதிகமாக மண்ணில் தேங்கும்போது அதில் உள்ள பொட்டாசியம் அயன்கள் மண்ணின் களிக்கூழ்ப் பொருள்களால் பிடிக்கப்பட்டு வைத்திருக்கப்படும் கல்சியம் அயன்களைப் பிரதியீடு செய்வதால் மண் காரமண் ஆக்கப்படலாம். இம் மண்ணில் நாம் உருளைக்கிழங்கு பயிரிடும்போது 'அக்ரிநேமைசிஸ்' (Actinomyces) எனும் நுண்ணுயிர்த் தாக்கத்தால் நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது. இவ்வாறான இரசாயன மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களை விட பௌதிக இயல்புகளிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் களிக்கூழ் பொருள்கள் சிதைவடைவதால் மழைக்காலங்களில் கனியுப்புக்கள் மண்ணரிப்பாலும், புவியீர்ப்பு நீரோடு வடிந்தகற்றப்படுவதாலும் மண்ணிலிருந்து இழக்கப்படுகின்றன.

### செயற்கை உர பாவனை

செயற்கை உரங்களின் தொடர்ச்சியான பாவனையால் ஏற்படும் தாக்கங்களை விவசாயிகளினால் உடனடியாக உணர்ந்துகொள்ள முடியாமையினால் செயற்கை உரப்பாவனையால் ஏற்படும் அதிகரித்த உற்பத்திச் செலவு தவிர்க்கமுடியாததொன்றாகிவிட்டது. ஆனாலும் தற்போது விவசாயிகளிடையே தமது மண் பரிசோதிக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அவர்கள் பல்வேறு விவசாயம் சார் நிறுவனங்களிடமும் தங்களுக்கு மண்பரிசோதனைக்கூடம் தேவை என்று கோரிவருகின்றனர். அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப விரைவில் மண் பரிசோதனைக்கூடம் ஒன்று நிறுவப்பட்டு விவசாயிகளின் மண்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களின் பயிர்களுக்கு ஏற்ற உர அளவுகள் சிபார்சு செய்யப்படின் உற்பத்திச் செலவு குறைக்கப்படும். அவ்வசதி கிட்டுமட்டும் விவசாயிகளே உங்கள் மூதாதையரின் வழி சென்று உங்கள் மண் வளத்தைப்பேண முயலுங்கள்.

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்குமான தரைப் போக்குவரத்துப் பாதை மூடப்படும் முன்னர் தென்மராட்சி, வன்னியிலிருந்து எருவும், குழைகளும் வருவிக்கப்பட்டு மண்ணை வளப்படுத்த விவசாயிகளினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் தற்போது அருகியுள்ளன. அத்துடன் தற்போது தோட்ட நிலங்களுக்கு இடும் எருக்கள் உரிய முறையில் மண்ணுடன் கலக்கப்படாது காற்றினால் பரவவிடப்படுவதைப் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. எனவே விவசாயிகள் இங்கு தற்போது கிடைக்கக்கூடிய இலை, தழைகளையும் எருக்களையும் சரியான முறையில் மண்ணுடன் கலந்து பயன்படுத்தும் போது அவர்களின் நிலங்கள் புதுப்பொலிவுறும். இந்நிலையில் செயற்கை உரங்களைத் தேவைக்கேற்றளவில் பயன்படுத்தும்போது குறைந்த உற்பத்திச் செலவில் கூடிய இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

★

# தென்னைகளில் தண்டு கசிவு நோய்!

**யாழ்**.குடாநாட்டில், பல இடங்களில் தென்னைகளைத் தாக்கும் தண்டுக் கசிவு நோய் அல்லது சாறு வடிதல் நோய் (Stem Bleeding Disease) பரவி வருகின்றது. இந்நோயினால் தாக்கப்பட்ட ஒரு தென்னையானது ஒரு வருடத்தினுள் படிப்படியாக இறப்படையும். இந்நோய் பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. முக்கியமாகத் தென்னை மரத்தின் தண்டில் காயங்கள் ஏற்பட்ட பகுதியினூடாக செவ்வண்டுத் தாக்கம், பெருமழை அல்லது வெள்ளம், தீயினால் ஏற்படும் சேதம், மேலதிக உரமிடல், மேலதிக பூச்சி நாசினி ஏற்றல் போன்ற காரணங்களாகும்.

இத்தண்டு கசிவு நோயினை எப்படி அடையாளம் காணலாம்?

இந்நோயின் ஆரம்ப நிலையில் மரப்பட்டையில் நீளப்பாடான வெடிப்புக்கள் ஏற்படும். 'செரற்ரோசிஸ்ரிஸ்



பரடொக்சா" (Ceratosystis Para-doxa) என்ற பங்கசு பலவீனம் அடைந்த இழையங்களை ஊடுருவுகின்றது. பங்கசுவின் தாக்கம் கசிவினை அதிகரிக்கச் செய்கிறது. செல் பட்ட தென்னை மரங்களின் காயங்களினூடும் இப்பங்கசு ஊடுருவுகின்றது.

### அறிகுறிகள்:-

தென்னை மரத்தின் அடிப் பகுதியிலோ அல்லது தண்டின் ஏனைய பகுதியிலோ மரப்பட்டையில் நீளப்பாடான வெடிப்புகள் தோன்றி செங்கபில அல்லது துரு நிறமான தண்ணீர்த் தன்மையான திரவம் கசிவது ஆரம்ப அறிகுறியாகும்.

சுமார் 6" - 9" வரை நீளமாக வெடித்து அதனூடாக பிசின் வழிவது போனறு வடியும். இந்நிலையில் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாதுவிடின் படிப்படியாக இப்பகுதி கருமை நிறமாகி முடிவில் மேற்பட்டை உக்கல் நிலையை அடையும். நோயுண்டான பல பகுதிகள் சேர்ந்து பெரிய பகுதிகள் உண்டாகும்.

நாளடைவில் நாம் கவனிக்காதுவிடின், இப்பகுதியில் இருந்து திரவத் தன்மையான கசிவு நின்று கூழ் போல் தடித்து மேற்பட்டை முழுவதும் உக்கி இருப்பதை அவதானிக்கலாம். தொற்றல் ஏற்பட்ட பகுதியை ஒரு கூரிய உளி அல்லது கத்தியினால் மேற்பட்டையை மட்டும் வெட்டி எடுத்து ஓரிடத்தில் போட்டு எரிக்கவும்.

தாக்கப்பட்ட பகுதிக்கு பங்கசு நாசினி பூசுமுன்பு இதனைச் செய்தல் வேண்டும். சில வேளைகளில் வீரியமான உருண்டையான பருத்த அடி கொண்ட இளம் மரங்களில் உள்ள மேற்பட்டையில் சில வெடிப்புக்களைக் கொண்டிருத்தல் அசாதாரணமாகும். இந்நோய், குப்பைகளைக் கூட்டித் தென்னை மரத்திற்குக் கீழ் தீயிடப்படுதல், மின்னல்தாக்கிய மரம், ஷெல் பட்ட தெனனைமரங்கள், செவ்வண்டுத் தாக்கம் ஏற்பட்ட மரங்களில் இலகுவில் அடையாளம் காணலாம்.

இந்நோயின் அறிகுறிகளான கசிவினையும், தண்டுக் கசிவினால் பாதிக்கப்பட்ட மரத்தில் செவ்வண்டுத் தாக்கம் உள்ளதா என்பதனையும் அவதானித்தல் வேண்டும்.

அதிகளவு உரப் பிரயோகமும், நீரினது சடுதியான உறிஞ்சலும் மரப் பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கசு உட்செல்ல வழிவகுக்கின்றது.

## கட்டுப்படுத்தும் வழிமுறைகள் எவை?

### கட்டுப்படுத்தும் முறை:-

இது ஒரு பங்கசு நோய் என்பதனால், ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் இலகுவாகக் குணமாக்கலாம். பிசின் வடியும் பகுதியை அல்லது கரிய நிறப் பரப்புக்களைக் கூரிய கத்தியினால் அல்லது கைக் கோடரியினால் சென்நிற இழையம் தெரியும் வரை அதாவது தென்னை மரத்தின் மேற்பட்டைய மட்டும் வெட்டி எடுத்து ஓரிடத்தில் போட்டு உடனடியாக எரிக்கவும். உக்கிய கரித் தன்மையான நாரிளையம் முற்றாக அகற்றப்படுதல் வேண்டும்.

தொற்றல் ஏற்பட்ட பரப்புக்களை முற்றாகத் துப்புரவு செய்தபின்பு தண்டில் தொற்றல் ஏற்பட்ட பகுதிக்கு மேற்புறமாக, 2அங்குலம் அளவு அகலத்தில் மேற்பட்டையினை மட்டும் சீவியெடுத்துவிடவேண்டும். பின்பு "போடோ கலவை" (Boardaux Mixture) என்னும் கலவையை (பங்கசு நாசினி) தயாரித்த உடனேயே காயப்படுத்தப் பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் (பட்டை வெட்டிய பகுதி உட்பட) தூரிகையின் உதவியுடன் பூசலாம்.

பத்து நாள்களின் பின்பு, வேறு தொற்றலோ அல்லது கசிவுகளோ இல்லாதவிடத்து காயங்களின் மேல், கரித்தார் (Coal Tar) அல்லது மெழுகு பூசிவிடவும். இத்தகைய நிகழ்வுகளில், சில தென்னைச் செய்கையாளர்கள் பட்டை வெட்டுவது ஏன் என்ற காரணம் தெரியாமல், எல்லா மரத்திற்கும் பட்டையை வெட்டுகின்றனர். இது முற்றிலும் தவறான செயல் முறையாகும்.

ஜெ.சத்தியேந்திரன்
யாழ்.மாவட்ட தென்னை
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச்
சபை, நல்லூர்.

தண்டு கசிவு உண்டாகிய மரத்திற்கு மட்டும் இதனைச் செய்தல் வேண்டும். கசிவு முற்றாக இல்லாமல் போனதனை உறுதிப்படுத்தக் காயங்களைச் சில நாள்களின் பின்பு பரிசோதிக்க வேண்டும். கசிவு அதிகளவில் ஏற்பட்டு பெரிய பரப்பளவு தாக்கப்பட்டால், தொற்றல் ஏற்பட்டுள்ள இழையங்களை இயலுமான அளவு முற்றாக அகற்றி அதனை எரித்தல் வேண்டும். இப்படியான நேரத்தில் கறையான் அல்லது வண்டுத் தாக்கம் நடைபெற வாய்ப்புண்டு. உதாரணமாகக் கறையான்களைக் கட்டுப்படுத்த 'குளோரோபைரிபொஸ்'

**கமமும் புலமும்**

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

பூசநாசினியைத் தெளிப்பது அல்லது பூசுவது அவசியமானதாகும்.

தண்டுக் கசிவு நோய்க்குப் பரிகாரம் காணமுன்பு தண்டுக் கசிவினை ஆராய்ந்த பின்புதான் மேற்குறிப்பிட்ட செயல்முறைகளைக் கையாள வேண்டும். பரிகாரம் நோய் நிகழும் சந்தர்ப்பத்தினைப் பொறுத்துள்ளது. உதாரணமாக மின்னலினால் ஏற்படும் தண்டுக் கசிவு எத்தகைய சந்தர்ப்பமாக இருந்தாலும், தண்டுக் கசிவுநோய்தான் என்று உறுதிப்படுத்தினால் மட்டும் மேற்குறிப்பிட்ட முறைப்படி பரிகாரம் செய்யலாம்.

### "போடோ கலவை" தயாரிப்பது எப்படி?

இது ஒரு பங்கசுக்கொல்லியாகும். இக்கலவை தயாரிப்பதற்கு மட்பாண்டங்களை உபயோகிக்கவும். ஒரு மரத்திற்குத் தேவையான அளவு பின்வருமாறு:-

செப்புசல்பேற் அல்லது துரிசு 40 கிராமுடன் 1/2 லீற்றர் நீரில் கரைக்கவும்.

நீறிய சுண்ணாம்பு (வெற்றிலைக்குப் போடுவது) 40 கிராமுடன் 1/2 லீற்றர் நீரில் கரைக்கவும்.

தண்டுக் கசிவு நோய்க்குப் பரிகாரம் செய்வதற்கு முதல்நாள் இரவு செப்புசல்பேற் பளிங்குகளை மட்பாத்திரத்தில் அரை லீற்றர் நீரில் ஊறவிடவும். நீறிய சுண்ணாம்பினை பிறிம்பாக 1/2 லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியில் வடித்தல் வேண்டும். பின்பு சுண்ணாம்புக் கரைசலினுள் துரிசுக் கரைசலை ஊற்றி இரண்டினையும் ஒன்றாகச் சேர்த்து கலவையாக்க வேண்டும். இக்கலவை தயாரித்த உடனேயே பாவித்தல் வேண்டும். பங்கசு நாசினிகள் நச்சுத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதனால் மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் பாவித்தல் வேண்டும்.

எனவே தற்போது வேகமாகப் பரவி வரும் இந்நோயினையும் பீடைத் தாக்கத்தினையும் உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோமாயின் தேங்காய் விளைச்சலைக் கூட்டமுடியும்.

எனவே மேலதிக விவரங்கள் தேவைப்படுமிடத்து, தென்னைச் செய்கையாளர்கள் 'ஜெ.சத்தியேந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநலசேவை கட்டடம், நல்லூர்' என்னும் முகவரியில் ஒவ்வொரு புதன்கிழமையும் அலுவலக நேரத்தில் நேரில் தொடர்புகொள்ள முடியும். ●

# கடனடிப்படையில் தையல் இயந்திரம்

கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தினர் தமது எல்லைப் பரப்பில் தையல் பயிற்சியினை முடித்துள்ள வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பத்துப் பேருக்கு தையல் இயந்திரங்களை கடன் அடிப்படையில் வழங்கவுள்ளனர்.

இந்தத் தையல் இயந்திரங்கள் மூலம் தமது வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் ஆற்றலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தலைவர் த.சிதம்பரப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ117)

# நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

ஆனைக்கோட்டை அருள்மிகு புளியங்கண்டு பிள்ளையார் தேவஸ்தான புனரமைப்புத் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு கௌரவ அமைச்சர்





**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

அத்துடன் இந்நிதி ஒதுக்கீட்டுக்கு உறுதுணையாக இருந்த **வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளருமான**

**திரு.வெ.அன்ரன் ஜோன்சன் J.P.U.M.** அவர்களையும்

**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

ஆனைக்கோட்டை
புளியங்கண்டு பிள்ளையார் தேவஸ்தானம்.

(90397)

# மயூரி இரும்பகம்

***நீர்வேலி வடக்கு, நீர்வேலி.***

- ★ ***எங்களிடம் பெயின்ற் வகைகள், சிப்பி என்பன மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.***
- ★ ***அத்துடன் இடியப்ப உரல், அச்சுரல், கொழுக்கட்டை அச்சுரல் என்பனவும் (வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு ஏதுவானவை) கிடைக்கும்.***
- ★ ***வீடுகளுக்கு பெயின்ற் செய்யும் வேலையும் நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும்.***

(90407) - உரிமையாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 05 |
| - | - |
| 09 | 08 |
| - | - |
| 1947 | 2000 |



## அமரர் சிதம்பரப்பிள்ளை ஸ்ரீபவன்

திதி: 25-07-2001

**அப்பா!**

**நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்**
**பிரியாது உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு!**

*"ஸ்ரீபவனம்"*
*செட்டித்தெரு,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை*

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்.

(90377)

# மரண அறிவித்தல்

## அபிராமி முருகானந்தம்

பிரான்ஸைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அபிராமி முருகானந்தம் 22.07.2001 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் முருகானந்தம் - கலாதேவி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியினரின் பேர்த்தியும், விநாயகமூர்த்தி ஐயா, காலஞ்சென்ற சோதியம்மா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சாந்தி நிவாசா"
*மேதர்ஸ் லேன்,*
*மானிப்பாய்.*
T.P.No: (பிரான்ஸ்) 00331-48363517

தகவல்:
பர.சிவானந்தன் (பெரியப்பா)
*(அண்ணா கோப்பி ஊழியர்)*

(90396)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை25.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இன்று ஆரம்பமாக வுள்ளது.

தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை இசையரங்கு இடம் பெறும்.

இன்றைய நிகழ்ச்சியாக கே.ஆர். சுந்தரமூர்த்தியின் நாதஸ்வரக்கச்சேரி இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5.00 மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும் அதைத் தொடர்ந்து குருமூர்த்த ஆலயத்தில் விசேட பூஜையும் புராண படன நிகழ்வும் தேவாரப் பண்ணிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

தேரடியிலுள்ள அறுபத்து மூவர் திருமடத்தில் திருமுறைப் பாராயணமும் பஜனையும் நண்பகல் மாகேஸ்வர பூஜையும் நடைபெறும்.(ஐ-17)

# கண்டியில் ஆதரவு ஊர்வலம்

கொழும்பு,ஜூலை25

சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு கோரும் முகமாக நேற்று முன்தினம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் கண்டியில் ஊர்வலமொன்றை நடத்தினர்.

இன்று முற்பகல் 11 மணிக்கு ஜோர்ஜ் டி.சில்வா கூரைப் பூங்காவிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் தலதா வீதி, கொட்டுகொடல்ல வீதி வழியாக கண்டி கச்சேரியைச் சென்றடைந்தது. இந்த ஊர்வலத்தில் சுமார் 500 பேர் பங்குபற்றினர். (-3)

# முன்பள்ளி கட்டட வேலை

சண்டிலிப்பாய்,ஜூலை25

இளவாலை காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளிக்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கும் வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலி.வடக்குப் பிரதேச சபை இக்கட்டடத்தை நிறுவுவதற்கு ஒரு லட் சத்து 25ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளது. (ஐ-135)

# பொதுக்கிணறு புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை25

சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்திற்கும் சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க.வித்தியாலயத் திற்கும் மத்தியிலுள்ள பொதுக்கிணறு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சில்லாலை றோமன் கத்தோலிக் கத் த.க.வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து பட்டினிக்கு எதிரான நிறுவனம் இப்பொதுக் கிணற்றைப் புனரமைத்துக் கொடுத்துள்ளது. (ஐ-135)

# மலசலகூடம் அமைப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை25

'கியுடெக்' நிறுவனம் பண்டத்தரிப்புப் பகுதியில் வறிய நிலையிலுள்ள 5 குடும்பங்களுக்கு மலசல கூடங்களை நிறுவிக்கொடுத்துள்ளது.

'கியுடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்பட்டுவரும் பண்டத்தரிப்பு மகளிர் சகோதர பகிர்வாழ்வு சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து இந்த மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-135)

# மணமகள் தேவை

*கடந்த பத்து வருடங்களாக இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கும், 29 வயது, 6 அடி உயரம் வெள்ளை நிறமுடைய, அச்சுவினி நட்சத்திரம் M.Sc. பட்டம் பெற்று வங்கியில் உயர் பதவி வகிக்கும் பொறியியலாளருக்கு CIMA / பல்கலைக்கழகத்தில் கணனி / பொறியியல் பட்டம் பெற்ற பட்டதாரியை / இவ்வருடம் பட்டதாரியாகவுள்ள அழகிய மணமகளை இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் விரும்புகின்றனர். ஜாதகக் குறிப்பு, ஏனைய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.*

*விள. இல.. 1332, மே/பா. உதயன்.*

(C/17492)

# மகிழ்வுடன் நன்றிகள்

## உபநயன மந்திர உபதேச விஷேட தீட்சை

**08-07-2001 ஞாயிற்றுக்கிழமை அன்று நிகழ்வுற்ற எமது புத்திரர்களான**

திருநிறை செல்வர்கள் :-

**ச. பாஸ்கரசர்மா தேசிகர், ச. இராஜேந்திர தேசிகர்**

ஆகியவர்களுக்கு

*விஷேட தீட்சை, மந்திர உபதேசத்தை தீட்சாகுருவாக இருந்து செய்து வைத்த "சிவாகம வித்பத்ஜோதி", "பண்டிதர்"*

**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**

அவர்களுக்கும்

புன்னாலைக்கட்டுவன் (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

*நிகழ்வில் கலந்துகொண்டு ஆசிகள் வழங்கிய சாவகச்சேரி நீதிபதி* **திரு.பிரேமசங்கர்** அவர்களுக்கும்

**ஸ்ரீலஸ்ரீ சோ.தண்டாயுதபாணி தேசிகர்** J.P.

மற்றும் அந்தணப் பெருமக்கள், சிவாச்சாரியர்கள் மேலும் நிகழ்வில் கலந்து சிறப்பித்து வாழ்த்துக்களைத் தெரிவித்த சைவமக்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சி.சபாரத்தின தேசிகர்
*(பண்டாரியம்மன் கோயில் பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்)*

*தம்பசிட்டி,*
*பருத்தித்துறை.*

(C/17534)

# லாலாசோப், சன்சையின் சோப் விலை அதிகரிப்பு

உற்பத்திச் செலவு அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற காரணங்களின் மத்தியிலும், கடந்த ஒரு வருட காலமாக எமது சோப்பின் விலையை அதிகரிக்காமல் பாவனையாளர் நன்மை கருதி விற்பனை செய்துவந்துள்ளோம். மேலும் மேலும் எமது சோப்பின் உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்வதனால் எமது சோப்பின் விலையை ஒரு ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. பாவனையாளர்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது எமக் குத் தொடர்ந்தும் ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

உரிமையாளர்,
லாலாசோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(C-17544)

உ

அனலையம்பதி - நயினாகுளம்

# அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை(26.07.2001) வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

| | | |
|---|---|---|
| 26-07-2001 | - | **கொடியேற்றம்** |
| 02-08-2001 | - | **சப்பறத் திருவிழா** (இரவு) |
| 03-08-2001 | - | **தேர்த்திருவிழா** |
| 04-08-2001 | - | **தீர்த்தத் திருவிழா** (பகல்) **கொடியிறக்கம்** (இரவு) |
| 05-08-2001 | - | **திருக்கல்யாணம்** (இரவு) |

***விசேட படகுச் சேவை.***


மேற்படி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு தினசரி காலை 10 மணிக்கு கண்ணகை அம்மன் கோயில் துறைமுகத்திலிருந்து அனலைதீவுத் துறைமுகத்துக்கும், பிற்பகல் 2மணிக்கு அனலைதீவில் இருந்து கண்ணகை அம்மன் கோயில் துறைமுகத்துக்கும் விசேட பயணிகள் படகுச் சேவை இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

அனைவரும் வருக! அருள் பெறுக.

*அனலைதீவு -05.* (90370) மேற்படி தேவஸ்தான பரிபாலன சபை.

# 31ஆம் நாள் நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1927 | 2001 |
| - | - |
| 07 | 06 |
| - | - |
| 17 | 25 |



## திருமதி சுவாம்பிள்ளை செபமாலை

**காதோரம் காற்றலைகளோடு**
**வந்த செய்தி பொய்யாகிப் போய்**
**விடாதோ என நாங்கள் ஏங்கிய**
**நேரம் அது உண்மைதான் என**
**அறிந்து இன்றும் நம்பமுடியாமல்**
**தவிக்கின்றோம்! இனி என்று**
**காண்போம் உங்களை?**

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

*15, கதீற்றல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(90380)

## தென்மராட்சி மாணவர் வசதி கருதி

# புலமைப் பரிசில் பரீட்சைக்கான மண்டபங்கள் இடமாற்றம்

தென்மராட்சி,ஜூலை25

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு வடமராட்சி, வலிகாமம், கைதடி ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தென்மராட்சி வலய பரீட்சை நிலையங்களின் விவரம் வருமாறு:-

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, எழுதுமட்டுவாள் ஸ்ரீ கனேசா வித்தியாலயம், வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை ஆகியவற்றின் பரீட்சை நிலையங்கள் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும்-

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பரீட்சை நிலையங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் -

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பரீட்சை நிலையங்கள் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும் -

சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரீட்சை நிலையம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும் -

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய பரீட்சை நிலையம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் -

வரணி மகாவித்தியாலய பரீட்சை நிலையம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த.க. பாடசாலையிலும் -

பளை மத்திய கல்லூரி பரீட்சை நிலையம் புலோலி றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலையிலும் -

நாவற்குழி மகா வித்தியாலய பரீட்சை நிலையம் உரும்பிராயில் இயங்கும் வசாவிளான் மகாவித்தியாலயத்திலும் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும் -

அமைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117-173)

## சில்லாலை தோட்டங்களில் இருந்த

# 3 நீரிறைக்கும் இயந்திரங்கள் ஒரே இரவில் திருடப்பட்டன

சண்டிலிப்பாய்,ஜூலை25

சில்லாலையில் வயல் காணிகளில் விடப்பட்டிருந்த விவசாயிகளின் மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒரே இரவில் திருட்டுப் போயுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வேளையில் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

பகலில் தங்கள் காணியிலுள்ள பயிர்களுக்கு நீர் பாய்ச்சிவிட்டு மறுநாளும் தொடர்ந்து நீர் பாய்ச்சுவதற்காக விவசாயிகள் கிணற்றடியில் விட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. மறுநாள் இவர்கள் நீர் பாய்ச்சுவதற்காக வந்து பார்த்தபோது அவற்றைக் காணாது அதிர்ச்சி அடைந்தனர்.

சில்லாலையைச் சேர்ந்த விற்றர் வில்லியம், அன்ரன் யோசவ், கந்தையா கனகரத்தினம் ஆகியோரின் நீர் இறைக்கும் இயந்திரங்களையே திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து இவர்கள் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் இப்பகுதி விவசாயிகளிடையே பலத்த பதற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ-135)

## பண்டத்தரிப்பு பகுதியில்

# கசிப்பு ஒழிப்பில் ஈடுபட பிரஜைகள் குழுவினர் முடிவு

சண்டிலிப்பாய்,ஜூலை25

சமுதாயத்தைச் சீரழித்து வரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழித்துக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது என்று பண்டத்தரிப்பு பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பண்டத்தரிப்புப் பிரஜைகள் குழுவின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குழுவின் தலைவரும், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான ஏ.வி.துரையப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய உறுப்பினர்கள் பலர் பண்டத்தரிப்பு பகுதியில கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியன அதிகரித்து வருவதையிட்டுக் கவலை தெரிவித்து அவற்றை ஒழித்துக் கட்டுவதற்கு இது வரை மேற்கொண்ட நடவடிக்கைகள் பயன் தரவில்லை என்று குறிப்பிட்டனர்.

இதனை அடுத்து இப்பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டு வருபவர்களை இனம் கண்டு அவர்களிடம் அதனைக் கைவிடுமாறு கேட்டு முதலில் கடிதங்களை அனுப்பி வைப்பது என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

(ஐ-135)

# அறிவிப்பு ஏதுமின்றி 'திடுதிப்பென' நடத்தப்பட்ட தாதியர் பரீட்சை!

சுகாதார சேவைகள் திணைக்களத்தால் தாதி உத்தியோகத்தர்களுக்கான தரம் I பயிலுநர் நியமனத்திற்கான எழுத்து மூலமான திறந்த போட்டிப் பரீட்சை முன்னறிவித்தல் ஏதுமின்றி திடுதிப்பென யாழ்.போதனா வைத்தியசாலை தாதிகள் கல்லூரியில் நடைபெற்றது. இப்பரீட்சைக்கு 51 தாதியர்கள் தோற்றினர்.

இநதப் பரீட்சை ஏற்கனவே கடந்த வருடம் மார்ச் மாதம் யாழ்.போதனா வைத்திய சாலையில் நடத்தப்பட்டது. அப்பொழுது நடந்த பரீட்சையின் வினாத்தாள்கள் முன்னரே வெளியாகிவிட்டன எனக் காரணம் கூறப்பட்டு அந்தப் பரீட்சை நிராகரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பரீட்சையே திடீரென கடந்த ஞாயிற்றுக்கிழமை பரீட்சைத் திணைக் களத்தால் நடத்தப்பட்டது.

ஆனால் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளோ அன்றி மீண்டும் பரீட்சை வைப்பது தொடர்பான அறிவிப்போ பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் பரீட்சார்த்திகள் பலத்த சிரமத்தின் மத்தியில் - யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று - தற்காலிக அனுமதி அட்டை பெற்றே- பரீட்சையை எழுதினர் என்று சம்பந்தப்பட்ட தாதிகள் விசனம் தெரிவித்தன.

இந்தப் பரீட்சை தொடர்பாக அரச அதிகாரிகளும் சுற்றறிக்கைகள் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவதொருவழியிலோ பரீட்சைக்குத் தோற்றும் தாதியர்களுக்கு தெரியப்படுத்தத் தவறிவிட்டனர் என்றும் கவலை தெரிவிக்கப்பட்டது.(க-31-15)

### சுயதொழில் முயற்சிக்கடன்

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் அங்கத்தவர்களுக்கு 'போரூட்' நிறுவன அனுசரணையுடன் சுயதொழில் முயற்சிக் கடனை வழங்கவுள்ளனர்.

இக்கடன் பெறவிரும்பும் சங்க அங்கத்தவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தினைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-117)

# குடும்ப உறுப்பினர் விவரம் படையினர் திரட்டுகின்றனர்

குடாநாட்டில் வசிக்கும் மக்களின விவரங்களைப் படையினர் திரட்டி வருகின்றனர்.

அந்தந்தப் பிரதேசப் படையினர் தத் தமது பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

படையினர் நேரடியாகவும், கிராம அலுவலர்கள் ஊடாகவும் குடும்ப விவரங்களைத் திரட்டுகின்றனர்.

வீடுகளுக்குச் செல்லும் படையினர் அங்கு வசிப்போரின் எண்ணிக்கையைப் பதிவு செய்வதுடன் குடும்ப விவர அட்டைகளையும் பரிசீலித்து வருகின்றனர். (ஐ-86)

# வேவிலந்தை வாழ் முத்துமாரி நாயகியின் பேரருள் பற்றிப் பேசுவதே பெருமகிழ்ச்சி

**அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன் கிழமை காலை நடைபெறுகிறது.**

**நவகோணத்தில் அமைந்த புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டத்தை முன்னிட்டு தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலரில் இருந்து இக்கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.**

இந்த உலகத்திற்கு எல்லாம் நாயகியாய் விளங்கும் முத்துமாரியின் பேரருள்பற்றிப் பேசுவதென்றால் பெரிய மகிழ்ச்சியாகும். அவளுடைய திருப்பாதம் பணிந்து வணங்குபவர் எல்லா நன்மைகளும் பெற்றுச் சீரோடு பொலிவர். உள்ளத்திலே அவளை நினைந்து செய்யும் பணிகள் செம்மையாக நிறைவேறும். முத்துமாரியைப்பற்றிப் பாடிய பாவலன் பாரதி 'கோடி நலம் செய்திடுவாய் குறைகள் எல்லாம் தீர்ப்பாய்' என்று கூறிப் போந்தான். அன்னை முத்துமாரியின் அருளை அறியாதார் யாருமிலர். தன்னைச் சரண் புகுந்தோரைக் காக்கும் தாயவள் மக்கள் பிணிகளைத் தீர்க்கும் அருமருந்து வெம்மை தணிக்கும் மாரி. அழகுக்கெல்லாம் பேரளகாய் விளங்கும் பெருந்தெய்வம். அவளைக் குல தெய்வமாய்க் கொண்டாடி வாழ்பவர்கள் பிணியின்றிப் பெருநிலத்தோடு வாழ்வர். உலகிற்கெல்லாம் 'மாரி' வரமருளும் அவள் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் இடமெல்லாம் வளம் மலிந்திருக்கும்; தொழில்கள் பெருகும்; தொண்டு சிறக்கும்.

### தேர்ந்தெடுத்த மரம்

இத்தகைய அன்னை தேரேறி வலம் வருகின்றாள். ஆண்டுக்கொரு முறை அடியார்களைத் தேடித் தேரிலே வருகின்றாள். எமது கோயில் வழிபாட்டு மரபிலே தேர்த்திருவிழா ஒரு முக்கியமான திருவிழாவாகும். இவ்விழாவின் தொடக்கம் நமது முன்னோரால் வழிபாட்டு நடைமுறையாக அமைந்ததைப் பற்றிப் பின்னோக்கிப் பார்ப்பது பயனுடைத்து. தேர் ஏனைய ஊர்திகளை விட மிகச் சிறந்த ஊர்தியாகப் பண்டைக் காலத்திலே கருதப்பட்டது. தேரைச் செலுத்தும் திறமை படைத்தோர் பேராற்றல் மிக்கவர்களாக 'அதிரதர்', 'மகாரதர்' என்ற பட்டங்களைப்பெற்றிருந்தனர். 'தேர்' என்ற சொல் 'தேர்ந்தெடுத்த மரம்' என்ற பொருள் தருவதாக அமைந்துள்ளது. எட்டுத் திக்குகளிலும் ஆகாயம், பூமி என்பவற்றிலும் தேர் செலுத்தக்கூடிய வல்லமைபெற்ற மன்னராகத் தசரதர் புகழ்பெற்றிருந்தார். 'மானசாரம்' என்னும் சிற்ப நூல் தேரின் இலக்கணங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. முற்காலங்களிலே பயணஞ் செய்வதற்கும், போர் புரிவதற்கும் பயன்படுத்தப்பட்ட தேர் கோயில்களிலே தெய்வங்களின் திருவுருவங்களை வைத்து ஊர்வலம் நடத்தவும் பயன்படுத்தப்பட்டபோது 'தேர்த்திருவிழா' மரபு தொடங்கியது. பழைய கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் 10ஆம், 11ஆம் நூற்றாண்டிலிருந்து கோயில்களில் தேர்த் திருவிழாக்கள் நடைபெற்றதைக் குறிப்பிட்டுள்ளன.

### நடமாடும் கோயில்

ஆண்டுக்கொருமுறை கோயில்களிலே தேர்த்திருவிழா நடைபெற்றது. 10, 15, 25 என வரையறை செய்யப்பட்டிருந்த கோயில் திருவிழா நாள்களிலே ஒருநாள் தேரோட்டம் நடைபெற்றது. தேரோடும் திருவீதியிலே ஊரெல்லாம் ஒன்றாய்க் கூடி வடம்பிடித்துத் தேரை இழுத்துவரும் காட்சி கோயிலின் மாட்சியையும் மக்களின் தெய்வ பத்தியையும் தெளிவாய்ப் புலப்படுத்தும் திருவிழாவாயிற்று. தேரோட்டத்திற்கு மரத்தினால் செய்த தேர்களே பயன்படுத்தப்பட்டன. தேரின் அமைப்பு கோயில் வழிபாட்டு மரபை விளக்கும் வகை



யில் அமைந்திருந்தது. தேர்ச் சக்கரங்களின் எண்ணிக்கை, பருமன், அளவு என்பவற்றிற்கு அமைய தேரின் அளவு முழுத்தேர், முக்கால் தேர், அரைத்தேர் எனக் கணிக்கப்பட்டது. தேரின் அமைப்பு சிறிய கோயிலைப் போன்றது. 'விட்டுணு தத்துவசம்கிதை' என்னும் ஆகமத்தில் 'இரதநிர்மாணப்படலம்'என்னும் பகுதி தேரின் அமைப்பு விதிமுறைகளை விரிவாய் விளக்கிக் கூறுகிறது. அதன் தொடக்கமே 'தேர் இந்துத் தெய்வங்களின் உறைவிடம்' எனக் கூறுகிறது. கோயிலின் அமைப்புப் போல சதுரம், அறுகோணம், எண் கோணம், வட்டம் என்ற அமைப்பில் தேரும் அமைக்கப்படுவதால் அதனை 'நடமாடுங்கோயில்' என்றும் சிறப்பித்துக் கூறுவர். ஏறகுறைய 250 முதல 300 வரையான அழகிய சிற்பங்களை உள்ளடக்கிய தேரை கலைக கோயில் என்றும் கூறுவர். பண்டைக் காலத்திலே வாய்மொழி மரபாகப் பேணப் பட்டு வந்த புராண இதிகாசக் கதைகளை இன்றைய காலத்து மக்கள் சிற்ப உருவிலே காணத் தேர் உதவுகிறது.

இதனை மேலும் தெளிவு படுத்துவதற்காகப் பூலோக, ஆகாய, சுவர்க்க வாழ்க்கையையும் தேரிலே சிற்ப வடிவிலே காட்டும் மரபு தோன்றியது. இதனால் இன்று 'தேர்' என்னும் சொல் தெய்வம் வீற்றிருந்து உலாவரும் சிறப்பான ஊர்தியாக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. கோயிலே எழுந்து உலா வருவது போலத் தேர்த்திருவிழா அமைந்தது. இதனால் மண்ணுலக வாழ்வியலும் தேரிலே சிற்ப உருவிலே சித்திரிக்கப்படலாயிற்று. அரச கொலு, இருக்கை, அணங்குகளின் நடனத் தோற்றம் போன்ற பல காட்சிகளும் அமைக்கப்பட்டன. சைவ, வைணவ சமயக் கதைகளை மண்ணுலக மக்கள் சமயப் பொதுமையுடன் அறிவதற்கும் பொருத்தமான சிற்பங்கள் அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. நுண்கலைகளின் அழகும், கவினும் வெளிப்படும் வகையிலே சிறப்பாக வர்ணங்களும் தீட்டப்பட்டன. தேரின் விமானம் போன்ற மேற்பகுதியை சிவப்பு, வெள்ளைச் சீலைகளால் மூடினர். தேரின் அடிப்பாகம் காலப்போக்கில் வெள்ளி, செம்பு, பொன் தகடுகளாலும் பொலிவு செய்யப்பட்டது. பொருள் வளநிலைக்கேற்ப கட்டுத்தேர், செய்கைத்தேர் என்ற இரு வகைப்பாடும் தோன்றியது. கிராமப்புறங்களிலே இன்றும் 'கட்டுத்தேர்' நடைமுறைக்கு உண்டு. எனினும் தேரின் சக்கரங்கள் மிக உறுதியான மரங்களால் செய்யப்பட்டன.

### கடைக்கண் பார்வை

தேரிலே உலாவரும் அன்னை தன் அருள் நோக்கினால் அனைவரையும் காக்க ஓடிவருகிறாள். அவளுடைய கோயிலில் வீற்றிருக்கும் திருக்கோலத்தை அண்மையிலே காணவேண்டி அடியார் தேர்த்திருவிழாவிலே கூடி நிற்பர். கோயில் வீதிகளிலே குடியிருக்கும் மக்கள் அன்னை தம் வீட்டு முன்றிலிலே வந்து நிற்கும் நாளுக்காக நோன்பிருந்து காத்து நிற்பர். பூரணகும்பம் வைத்துத் தோரணம், வாழைநாட்டி வீதியை விளக்கி நிற்பர். தேரில் வரும் அன்னையின் திருவழகைக் கண்ணில் நிறுத்தி வழிபடுவர். விண்ணிலிருந்து மண்ணுககு வீடு தேடிவந்து நிற்கும் அன்னையின் கடைக் கண்பார்வை அனைவருக்கும் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் வணங்கி நிற்கும் நிலை, நோயும் பிணியும் அகல பூவும் புகையும் கொண்டு தேரில வலம் வரும் காட்சி, பக்திப் பரவசத்தை ஊட்டும். மேளவாத்தியம் முழங்க நாதஸ்வர ஒலியுடன் இணையும் பக்தர்களின் பாடல் ஒலி அன்னையின் ஆலயமே எழுந்து வருவது போன்ற உணர்வைத் தரும். வெப்பம் தணிந்து தண்மை பெருகவேண்டிப் பக்தர்கள் சுமந்துவரும் பால்செம்புகள் எமது மண்ணுக்கு மாரியைப் பொழிவிக்கும்.

**கலாநிதி**
**மனோன்மணி சண்முகதாஸ்**

இத்தேர்த்திருவிழா எமது கோயில் வழிபாட்டின் முழுமையான நடைமுறைகளை ஒரு நாளில் உணர்ந்து கொள்ள வழி செய்யும் பெருவிழாவாக அமைந்துள்ளது. எதிர்காலத் தலைமுறையினர்க்கு வழிபாட்டுப் பயிற்சியைத் தரும் சிறந்த கற்பித்தல் செயற்பாடாகவும் விளங்குகிறது. எமது முன்னோர் எமக்கு விட்டுச்சென்ற வழிபாடு நாம் நல்ல வழியிலே செல்ல இன்றும் துணை நிற்கிறது.

*"துன்பமே இயற்கை என்னும்*
*சொல்லை மறந்திடுவோம்:*
*இன்பமே வேண்டி நிற்போம்*
*யாவும் அவள் தருவாள்"*

★

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 14 . 12 . 1963

உதிர்வு 04 . 08 . 2000

## அமரர் சரவணை ஜெயராசா

அன்பான அப்பா!
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
அழியா நினைவோடு நித்தம்
ஆறுதல் இன்றித் தவிக்கின்றோம் - அப்பா!

*ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

*ஞானவைரவர் கோயிலடி,*
*புதிய செம்மணி வீதி,*
*கல்வியங்காடு.*

- மனைவி, பிள்ளைகள்.

(90358)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 10 - 05 - 1937

அஸ்தமனம் 05 - 08 - 2000

## அமரர்
## சங்கரப்பிள்ளை சரவணமுத்து

திதி:- 25-07-2001

ஆண்டொன்று என்ன
ஆயிரம் ஆண்டுகள்தான் சென்றாலும்
ஆறிடுவிடுமோ எம் துயர்?
நின் பிரிவு தாங்க முடியவில்லையே!

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:-
*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:-
*"ஈஸ்வரி இல்லம்",*
*நெல்லியடி.*

(90346)

# நெஞ்சமகலா நினைவுகளின்
# ஓராண்டு நிறைவுடனே ...!



அகம் மகிழ 31 - 07 - 1945

அகம் நெகிழ 25 - 07 - 2000

## அமரர் கிருபைரத்தினம் ஜெயசீலன்

(முன்னாள் கிராம அலுவலர் - துன்னாலை கிழக்கு)

இன்றுடனே நீர் மறைந்து ஓராண்டு ஆனதுவே!
அன்று போல் இன்றும் உன் நினைவு மாறவில்லை
ஆவிழந்த கன்றாக நாமிங்கு தவிக்கின்றோம்
பூவிழந்த உன் மனையாளும் கலங்குகின்றாள்.

சீராட்டிப் பாராட்டியெமை வளர்த் தெடுத்தாய்!
சீராக நன்னெறியில் வாழவும் வழிதந்தாய்!
சீராளா! ஜெயசீலா! உனதான்மா சாந்தி பெற
பாராளும் கர்த்தரிடம் வேண்டுதல் செய்வோமே!

ஓராண்டென்ன பல்லாண்டுகள் கழிந்தாலும்
தேறாத உள்ளத்தின் கவலைகள் தீராதே!
பாரிலுள்ளவரை உமை மறவோம் அப்பாவே!
ஆரிங்கு ஆறுதல் தரவல்லார் அப்பாவே?

ஆக்கம்: *"யாழோன்"*

*அணிஞ்சிலடி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

பிரிவுத் துயரினிலே:
மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்தி.

(89976)

# ஒரு திருமுருகன்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழைய முறைப்படி திரும்பவும் நிறுவினர் என்பர்

இவருக்குப் பின்பு ஆலயத்தை நிர் வகிக்கும் பொறுப்புத் தற்போது ஆலயத்தைத் திறமையாக நிர்வகிக்கும் குமாரதாஸ் மாப்பாண முதலியாரிடம் வந்தது. இவருடைய காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நிரந்தரமற்ற சூழ்நிலையால் காலத்துக்குக்காலம் ஆலய கருமங்கள் முன்பு நடைபெற்றதுபோல் நடத்த முடியாமற்போன போதும் இவர் அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்துப் பொறுமையாகத் தன்னம்பிக்கையுடன் ஏதோ வகையில் ஆலய கருமங்களை ஒழுங்குபடுத்தி நடத்திவருகின்றார்.

இவர் பொறுப்பேற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியாகப் பல திட்டங்களை வகுத்துததுமல்லாமல் அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளார். ஆறுமுகசாமியின் தெற்கு வாசலின் கோபுரம், மூலஸ்தான அபிஷேக மண்டபம், உற்சவ கால மண்டபம், தேர் தரிப்பிடம், வசந்த மண்டபம், வைரவர்பீடம் போன்றவைகளின் புனருத்தாரணமும் இக்காலத்தில் நிறைவேற்றப் பட்ட திட்டங்கள் ஆகும். மேலும் சமீப காலத்தில் தீர்த்தக்கேணி, பழநி ஆண்டவர் பீடம் புனரமைப்பதற்கு ஆயத்தங்கள் செய்து திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்துடன் விநாயகர்பீடம், பள்ளிஅறை போன்றவை புத்தம் புதிய பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான நிதி ஆலய கருமங்களில் அடியார்கள் நிறைவேற்ற வரும்போது அதிகமாக அற விடப்படுவதனால் சேகரிக்கப்படுவதில்லை. அடியார்களின் தெய்வ பக்தியால் பலதரப்பட்ட கட்டட நிர்மாணப் பொருள்கள் காணிக்கையாக வழங்கப்படுகின்றன.

அன்றுதொட்டு இன்றுவரையும் இந்த ஆலயத்தில் சைவ வேதாகம முறைப்படி நித்திய கருமங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மாப்பாண முதலியாரின் பின்பு அவரின் மூத்தமகன் சண்முகதாஸ் மாப்பாண முதலியார் ஆலயத்தை நிர் வகித்தார். அவருடைய காலத்தில் நாட்டின் நிலைமை அமைதியாக இருந்தது. அப்போது ஆலய கருமங்கள் முன்பு நடைபெற்றதுபோல் பிரச்சினைகள் எதுவுமின்றி இரவு பகலாக நடைபெற்று வந்தன.

மேலும் ஆலயத்தைத் தரிசிக்கும் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வந்தது. எதிர்காலத்தில் ஆலயகருமங்கள் முன்பு நடைபெற்றதுபோல் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போமாக.

★



உ

# அராலி கரைப்பிட்டிக்
# கணபதீஸ்வரன் திருக்கோயில்
## வருடாந்த திருவிழா - 2001

**26.07.2001 நாளை வியாழக்கிழமை முதல்**
**04.08.2001 சனிக்கிழமை வரை**

| | | |
|---|---|---|
| **கொடியேற்றம்** | 26. 07. 2001 | வியாழக்கிழமை<br>*காலை 9. 00 மணி* (பழைய நேரம்) |
| **சப்பறம்** | 02. 08. 2001 | வியாழக்கிழமை<br>*மாலை 7. 00 மணி* (பழைய நேரம்) |
| **தேர்** | 03. 08. 2001 | வெள்ளிக்கிழமை<br>*காலை 9. 00 மணி* (பழைய நேரம்) |
| **தீர்த்தம்** | 04. 08. 2001 | சனிக்கிழமை<br>*காலை 9. 00 மணி* (பழைய நேரம்) |

நாதாஞ்சலி நாதகலாமணி **ஆர்.சிவகுமார்** குழுவினர்.

*இரவுத் திருவிழா மாலை 5. 00 மணிமுதல் நடைபெறும்.*

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(90156)

- தேவஸ்தானம்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 - 04 - 1930

இறப்பு 19 - 08 - 1996

## அமரர் கதிரன் நடராசா

திதி: 25.07.2001

இல்லத்தின் தலைவனே!
இதயத்தின் ஒளிச்சுடரே!
உண்மையின் உருவே!
உயிரான எம் ஆலயமே!
என் உயிர்க் கணவனே!
கருணையின் தந்தையே!
எமைவிட்டுப் பிரிந்து
ஐந்து ஆண்டுகள் ஆனதுவே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்-

*"செல்வமாளிகை"*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

தகவல்
N.குணேஸ்வரன் (ஜாகுலன் - மகன்)
ஆஸ்பத்திரி வீதி.

(90319)


கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக
உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

CAVADI மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதிமயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்

*கற்பூரம் என்று*
*கேட்காதீர்கள்*
*'காவடி' என்று*
*கேட்டு வாங்குங்கள்*




*நாடெங்கிலும்*
*கிடைக்கும்*

ஏக விநியோகத்தர்கள்:

பிரபா டிரேடிங் கம்பனி

*31, கபோஸ் லேன், கொழும்பு-11. தொ.பே : 329426, 422750*

# தென்மராட்சி மாணவர்களின் அனுமதி அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 25
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான அனுமதி அட்டைகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதாக அதிபர் திருமதி சி. சிவநாதன் அறிவித்துள்ளளார். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை வியாழக்கிழமை புலோலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் வழங்கப்படவுள்ளதாக அதிபர் க. குணபாலசிங்கம் அறிவித்துள்ளார், (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் வழங்கப்படவுள்ளதாகவும்—

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் அன்றைய தினம் வித்தியாலயத்திற்கு வருகைதந்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறும் அதிபர் எம். பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
மிசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும் ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விவரங்களை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இயங்கும் வித்தியாலயத்தில் பதிவு செய்யுமாறு அதிபர் எஸ் கந்தசாமி அறிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளதாகவும்—

வடமராட்சி பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கல்லூரி மாணவர்களும் நாளை வருகை தந்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறும் அதிபர் மு. நாகேந்திரராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
மட்டுவில் தெற்கு அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விகற்று தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலைக்கு வருகை தந்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறு அதிபர் க. மயில்வாகனம் அறிவித்துள்ளார். (ஐ-117)

தென்மராட்சி, ஜூலை 25
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்திற்கு வருகைதந்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறு அதிபர் ரி. கந்தையா அறிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 25
மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போத வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி. சீ. ஈ. சாதாரணதர மாணவர்கள் அனைவரும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வருகை தந்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## தெய்வீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 25
உரும்பிராய் ஞானவைரவ சுவாமி கோயில் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணி முதல் சிறப்புச் சமயச்சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில் 'சமய வாழ்வு' என்னும் தலைப்பில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உரையாற்றுவார். (ஐ)


## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 07-08-2001 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, ''தவிசாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 07-08-2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்,

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பொருள்கள் சேவைக்கான வரி |
|---|---|---|---|
| 1. பத்தைமேனி விநாயகர் சனசமூக நிலையத் திருத்தம். | 3000. 00 | 500. 00 | 62. 50 |
| 2. சிறுப்பிட்டி பூமகள் பாலர் பாடசாலைத் திருத்தம் | 1000. 00 | 250. 00 | 31. 25 |
| 3. நீர்வேலி விநாயகர் ச. ச நிலையத் திருத்தம் | 1000. 00 | 250. 00 | 31. 25 |
| 4. உரும்பிராய் ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடத் திருத்தம் | 4000. 00 | 500. 00 | 62. 50 |
| 5. கோப்பாய் விக்கினேஸ்வரா ச. ச நிலையத் திருத்தம் | 1000.00 | 250. 00 | 31. 25 |
| 6, அச்சுவேலி நவோதய ச.ச, நிலையத் திருத்தம் | 3000. 00 | 500. 00 | 62. 50 |
| 7. ஊரெழு பாரதி ச.ச. நிலையத் திருத்தம் | 1000. 00 | 250. 00 | 31. 25 |
| 8. அச்சுவேலி கலைமகள் பாலர் பாடசாலைத் திருத்தம் | 1000. 00 | 250. 00 | 31. 25 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில், எதிர்வரும் 06-08-2001 ஆம் திகதி பி.ப. 12. 30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம், ஜே.பி.யு.எம்,
தவிசாளர்.
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,

(சி/17543)


## மந்திகையில் சிகிச்சை பெற்று வந்த நெருப்புக் காய்ச்சல் நோயாளர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம்

தென்மராட்சி, ஜூலை 25
நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற ஏழு பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

துன்னாலை வடக்கு கொடிக்காடு வீடமைப்புத் திட்ட முகாமைச் சேர்ந்த கே. இரத்தினகுமார் (வயது 26) இவரது மனைவி இரத்தினகுமார் ரவிகலா (வயது 26) பாலசிங்கம் சசிகலா (வயது 28), மனோகரன் பத்மாவதி (வயது 27), கரணவாய் நவிண்டிலைச் சேர்ந்த செல்வநாயகம் நகுலேஸ்வரன் (வயது 14), அவரது சகோதரியான செல்வநாயகம் செல்வரதி (வயது 13) இவர்களது உறவினரான கே.காந்தரூபன் (வயது 20) ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் ஆவர். (க-117)

## கட்டாக்காலி கால்நடைகளால் நீர்வேலிப் பகுதியில் பயிர் அழிவு

நீர்வேலிப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளால் விவசாயிகள் பெருஞ் சிரமப்பட்டு வருகின்றனர்.

மக்கள் சிலர் தமது வளர்ப்புக்கால்நடைகளை அவிழ்த்து விடுவதால் கால்நடைகள் தோட்டங்களில் சென்று பயிர்களை மேய்ந்து வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை —
பயிர்களை அழிக்கும் கால்நடைகளைப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைக்குமாறு விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## 2 ஆம் தவணைப் பரீட்சை ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 25
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. (ஐ-117)


## வாழ்த்துகின்றோம்

முதலாவதாக ஜனாதிபதி விருது பெற்ற
யா/வயாவிளான் ம. ம. வித்தியாலயத்தைச்
சேர்ந்த

**செல்வன் தளையசிங்கம் விஜயரமணன்**

அவர்களையும் அதற்குப் பல்வகையிலும்
வழிகாட்டியாக இருந்து செயற்படுத்திய
காங்கேசன்துறை மாவட்டச் சாரண ஆணையாளர்

**திரு. N. சௌந்தரராஜன்**

அவர்களையும் ஏனைய சாரண அங்கத்தவர்களையும்
வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் மற்றும் ஊழியர்கள்.
யா/வயாவிளான் ம.ம. வித்தியாலயம்,
உரும்பிராய்.

(சி/17545)



## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

(1) பதவி: விற்பனை உதவியாளர் (தற்காலிகம்)

(2) சம்பளம்: கடமையாற்றும் நாளொன்றுக்கு 90/- மொத்த வேதனமாக வழங்கப்படும்.

(3) தகைமைகள்:
கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் சாதாரணதரம் அல்லது க. பொ. த (சா/த) பரீட்சையில் எண் கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(4) வயது:
விண்ணப்பதாரிகள் 25.7.2001 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) பிணை:
நியமனத்தின் போது ரூபா 13,500/- ரொக்கப் பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

(6) ஏனைய விவரங்கள்:
சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, விண்ணப்பங்களை 10.08.2001 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய்.

(சி/27550)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## குருவிகள் விற்பனை

Love Birds (லவ்பேட்ஸ்) குருவிகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (90391)

## மரக்கன்றுகள் விற்பனை

ஒரு பெரிய அருகேரியா (Arugeria) கன்றும் றோஸ், செவ்வரத்தை, குறோட்டன், தேசி மற்றும் Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள், தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (90393)

## மணமகள்மார் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமகள்மார் தேவை. 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப் போட்டோ, குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (90387)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் என்பன ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு:- சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(மேல்மாடி - கன்னாதிட்டிச் சந்திக்கருகில்) (90359)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

நாவலர் வீதியில் உடுப்புகள் அடங்கிய பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். **P.M.**இராமலிங்கம், 373(651), நாவலர் வீதி, நல்லூா, யாழ்ப்பாணம். (90401)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த தங்கராசா நடேசரூபி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.786632080V), விசேட அ.அட்டை (இல.091033904) என்பன இருபாலைக்கும் நாவலர் சந்திக்குமிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அம்பாள் புடைவையகம், புத்தூர் மேற்கு, புத்தூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90390)

ஐயனார் கோயிலடி, கொடிகாமம் என்ற முகவரியைச் சேர்ந்த காசிநாதர் கஸ்தூரி என்பவருடைய விசேட அ.அ., தேசிய.அ.அ. என்பன நல்லூா முன் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அன்னம் தேநீர்க்கடை, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (சந்தையடி) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90399)

துன்னாலை, ஆட்டுப்பட்டிக் கொலனியைச் சேர்ந்த அற்புதராசா குமார் என்பவரது அடையாள அட்டைகள் அடங்கிய பேர்ஸ் கடந்த மாதம் துன்னாலைக்கும் மாலு சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் துன்னாலை கிழக்கு கிராம அலுவலரிடம் ஒப்படைக்கவும். (C/17554)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970ஆம் ஆண்டில் பிறந்த, ஆசிரியருக்கு தகுந்த மணமகள் தேவை. தொடர்பு- வி.இல.1338, மே/பா உதயன். (90361)

## சுயதொழில் ஊக்குவிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை25

'கெயர்' நிறுவனம் பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் சுயதொழில் ஊக்குவிப்புக்காக 30 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (ஐ-135)

# துயர் பகிர்கின்றோம்

எமது மன்றத்தின் உறுப்பினரும் எமது கிராமத்தின் முன்னாள் கிராம சேவையாளரும் ஆகிய

## கதிரித்தம்பி குமாரசாமி

**அவர்களின் மறைவையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*உசன்,*
*மிருசுவில்.* (90405)

- உசன் இந்து இளைஞர் மன்றம்.

இரும்புக் கேற், யன்னல் கிறில் செய்து வழங்குவதற்கான

## கேள்வி கோரல்

மேற்படி பொருள்களுக்கான பின்வரும் விபரப்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கேள்வி கோரப்படுகிறது.

1. 7' உயரம் 15' அகலம் கொண்ட இரட்டை கேற் ஒன்று.
2. 4'X 1 1/2' அளவு கொண்ட யன்னல் கிறில் 30 துண்டுகள்.

*கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி:*
**30.07.2001 நண்பகல் 12 மணி**

*கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும இறுதித்திகதி:*
**01.08.2001 நண்பகல் 12 மணி**


*கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரமும் திகதியும்:*
**01.08.2001 பிற்பகல் 4 மணி**

1. கேள்விப்பத்திரதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. மீளப்பெறக் கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1,500/- சங்கக் காசாளரிடம் ரொக்கமாகச் செலுத்தி இதற்கான பற்றுச் சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாய் இருக்க அனுமதிக்கப்படுவர்.
4. கேள்வி தொடர்பான இறுதி முடிவு கேள்விப் பத்திர சபையின் முடிவாகவே இருக்கும்.
5. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் தமது கடித உறையை அரக்கு முத்திரையிட்டு, கேள்விப்பத்திரக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இரும்புக் கேற், யன்னல் கிறில் செய்து வழங்குவதற்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு கீழ்க் காணும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது சங்கத்திலிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் இடுதல் வேண்டும். நேரடியாக ஒப்படைத்தல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**திரு .நா. இராசகுரு**
*பொது முகாமையாளர்,*
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
(C/17549) *திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.*

உ

# நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் - 2001



*"மரகத மயின் மேல் வரு முருகா அரகர சிவசிவ அறுமுகவா*
*சரவண பவனே சண்முகனே*
*வரந்தர வாவா என்முன்னே*
*அரவணி சிவனா ருள் பாலா பரவ வரமருள் பரமதயாளா"*

*(சிவயோக சுவாமிகள்)*

அன்புடையீர்!

யாழ்.நகரில் புகழ்பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் இன்று (25.07.2001) புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி மடத்தில், முருகன் அருள்வேண்டிவரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாள்களும் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

01. கொடியேற்றம்
இ.எஸ்.பேரம்பலம் ஸ்தாபனத்தார், கொழும்புக் கிளை
02. Rtd. W/com - R.விவேகானந்தன் குடும்பம் நியூயோர்க்
எஸ்.நடராஜா குடும்பம், ஆலிங்டன். U.S.A.
03. நகைக்கடை வர்த்தகர்கள், ரொறான்ரோ.
04. எஸ்.பத்மநாதன், ஓய்வுபெற்ற சிறாப்பர், யாழ்.கச்சேரி (கனடா)
05. கே.ஆறுமுகதாசன் குடும்பம், ரொறான்ரோ.
06. லண்டன், ஜேர்மனி, சுவிஸ், ஆஸ்திரேலியா, பிரான்ஸில் வாழும் இந்து மக்கள்.
07. எஸ்.அன்ரனிப்பிள்ளை குடும்பம், அம்பிகா ஜுவல்லர்ஸ், கனடா.
08. புறக்கோட்டை வர்த்தகர்கள், கொழும்பு, செட்டித்தெரு நகைக் கடை வர்த்தகர்கள்,
புடைவைக்கடை வர்த்தகர்கள், கொழும்பு.
09. முருகன் அடியார்கள், கொழும்பு.
10. அம்பிகாபதி பான்ஸி ஹவுஸ், யாழ். கொழும்பு ஸ்ரீ வீடியோ ரொறான்ரோ சிவகாந்தன்
Skancio நிறுவனம் கொழும்பு - 12, எஸ்.சண்முகநாதன் Moor Colombo - 6.
புடைவைக் கடை வர்த்தகர் - கனடா.
11. யாழ்.வர்த்தகர்கள்
12. Bank of Ceylon.
13. பெற்றா எசென்ஸ், டாம் வீதி, கொழும்பு. யாழ்ப்பாணம்
14. S.SHANMUGAM, SILVER KROWN HARD WARES, COLOMBO - 12.
15. தம்பையா ஸ்ரீபதி, சட்டத்தரணி ரொறான்ரோ, சு.ரிஷி, நல்லூர் குமரன், ரொறான்ரோ,
எஸ்.தியாகராஜா முருகன் புத்தகசாலை ரொறான்ரோ கனடா.
16. COMMERCIAL BANK.
17. எஸ்.ரட்னகோபால், சாலாமன் றோட், கொழும்பு - 4.
18. யாழ்.மாநகரசபை - யாழ்ப்பாணம்.
19. Dr.T.வசந்தகுமார், கொம்பியூட்டர் நிறுவனம், கனடா.
20. பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
21. Dr.சண்முகலிங்கம் (நாவலர் வீதி) U.S.A.
22. சி.சிவசாமி Chanchi Arachi garden, Colombo - 12.
23. யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
24. கனடா வாழ் இந்து மக்கள். (தேர்த்திருவிழா)
25. Dr.T.சூரியபாலன், கனடா.
26. கனடா வாழ் நல்லூர் மக்கள்.

நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவம் இன்று (25.07.2001) புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும் நாளிலிருந்து தொடர்ந்து 26 நாள்களும் மேற்கூறிய மடத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு முன்வந்துள்ளோம்.

இந்த நற்பணிக்கு தங்கள் அன்பார்ந்த ஆதரவை நல்குமாறு வேண்டுகின்றோம். அன்னதானம் செய்ய விரும்புவோர் அன்னதானத்துக்குத் தேவையானவற்றைப் பொருள்களாகவும் உதவலாம்.

*தொடர்புகளுக்கு:*
*மூத்ததம்பிமடம்,*
*139, கோயில் வீதி,*
*நல்லூர்.*

(C/17547)

**- செ.சோமாஸ்கந்தன்.**

# 'லாண்ட்மாஸ்டர்' ஏறி படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த 'லாண்ட்மாஸ்டர்' வாகனத்தில் இருந்து தவறி விழுந்தவர் மீது அது ஏறியதால் அவர் படுகாயமடைந்தார்.

கொக்குவிலில் நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் வேலாயுதபிள்ளை பவானந்தன் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

'லாணட்மாஸ்டரைச் செலுத்திச் சென்றவரே அதனைத் திருப்பியபோது தூக்கிவீசப்பட்டு சில்லுக்குள் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)


**கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை மாணவர்களுக்கு**

- க.பொ.த. (சா/த) பரீட்சை விண்ணப்பம் பூர்த்தி செய்தல்
- விசேட அ.அட்டை வழங்கல்

இடம்:- 25,27-07-2001அம் திகதிகளில் பளை மத்திய கல்லூரி (புலோலி)
26-07-2001அம் திகதி யா/ஆனைக்கோட்டை பாலசுப்ரமணியம வித்த.
நேரம்:- மு.ப. 9.30 - 3.30 வரை

*அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகின்றேன்.* - அதிபர்.

(90409)


## நெஞ்சகலா ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் உடுப்பிட்டியில் 19 - 02 - 1926

மறைவு கனடாவில் 05 - 08 - 2000

**அமரர் செல்லப்பா கிருஷ்ணர் (நடராசா)**

Retd.R.M.P.

ஆண்டு திதி - சஷ்டி - 26-07-2001

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

செல்லப்பா இராசமணியும் (சகோதரி)
கனடா வாழ்
மூன்று மருகர்மார் - மகள்மார்.
பேரப்பிள்ளைகள்.

*'இலக்குமி வாசம்'*
*உடுப்பிட்டி.*

(90416)

## கண்ணீர் அஞ்சலி

வயாவிளான் ஞானவைரவர் ஆலய முன்னாள் அர்ச்சகர்
இராமலிங்கஐயர் (உமா ஐயர்)
அவர்களின் அன்பு மகள்

**வித்யாரதி (ரதி)**

அவர்களின் மறைவையிட்டு எமது குடும்ப இதய அஞ்சலியை அவருக்குக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மறவன்புலோ,*
தற்காலிக முகவரி:
*சிவன் வீதி,*
*சித்தன்கேணி.*

பிரம்மஸ்ரீ மயூரன் - சர்மா
மாதுளன் சர்மா
அப்பா, அம்மா.

(90413)

## மண்ணெண்ணெய் குடித்த குழந்தை உயிரிழந்தது!

போத்தலுடன் இருந்த மண்ணெண்ணெயை குடித்து முகத்திலும் ஊற்றிக் கொண்டதாகத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒன்றரை வயதுப் பெண் குழந்தை நேற்று அங்கு மரணமானது.

அச்சுவேலி, நாவல்காட்டைச் சேர்ந்த கணேஸ்வரன் சுகந்தினி என்ற பெண் குழந்தையே உயிரிழந்ததாகும்.

இது குறித்து தெரியவருவதாவது:-

குசினிக்குள் யாருமில்லாத வேளை சென்ற அந்தக் குழந்தை அங்கேயிருந்த மண்ணெண்ணெய்ப் போத்தலை எடுத்துக் குடித்ததுடன் முகத்திலும் ஊற்றிக்கொண்டது. உடலில் மண்ணெண்ணெய் மணக்கவே கழுவிவிடப்பட்டுள்ளது. குழந்தை எனினும் சில மணி நேரத்தில் குழந்தை மயக்கமுற்றது. அதையடுத்து ஆஸ்பத்திரிக்குக் குழந்தை எடுத்துச்செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இக்குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மரணமானது. (க-15)


## விற்பனைக்கு

Japan நாட்டுத் தயாரிப்புக்களான Sony, National, T.V., Deck வகைகள், Pioneer, Kenwood, Technics, Ongyo Audio Kits, மற்றும் பெரிய அளவிலான Speaker Box வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கு:

SHAN MULTI TRADE CENTRE
142, Stanly Road,
Jaffna.

(90415)

## நாகம்ஸ் சுன்னாகம்

27-07-2001 - வெள்ளி வரை
சரத்குமார், மீனா,
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.)
28-07-2001 - சனி முதல்

(90410)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த், சாக்ஷி,
பிரகாஷ்ராஜ்,
ரம்யாகிருஷ்ணன், நாசர்
*மற்றும் பலர் நடிப்பில்*

வாஞ்சிநாதன்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17443)

## சுடர் ஒளி

29-07-2001

- யாழ்.நகருக்கு உள்ளும் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல்! படையினருக்கு அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி
- சர்வஜன வாக்கெடுப்பில் கூட்டணிக்குள் குழப்பம்
- இலங்கையுடன் அமெரிக்கா தீவிர இராணுவக் கூட்டு
- வீறு கொண்டு எழுந்த மக்களின் வீதிப் போராட்டம் வெற்றி!
- "மிஸ்"மாருக்கும் மீசையா? கவலை வேண்டாம்!
- குண்டுக் கலாசாரத்தால் அதிரும் முஸ்லிம் காங்கிரஸ்
- ஜேர்மனியில் நடந்த தேர்த்திருவிழா
- *மற்றும் அரசியல் அம்பலம், தேரடி அரட்டை, பித்தன் பதில்கள், முத்தமிடும் ரோஜா இதழ்கள் தொடர்கதை, இளஞ்சுடர் சிறுவர் பகுதி, சினிமா, விளையாட்டு, மசாலா மிக்ஸ், ஆந்தையாரின் க்ரைம் டயறி உட்படப் பல அம்சங்கள்.*

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை

(C/17551)




நடிகர் திலகம்
*சிவாஜிக்கு*
ஸ்ரீசாயிராமின்

## கண்ணீர் அஞ்சலிகள்

பராசக்தியின் பாசமலர்
படிக்காத மே தையை
முதல் மரியாதை கொடுத்து
பார் மகளே பார் எனக்
கௌரவம் அளித்து
பேசும் தெய்வ மாகப் பல
இரும்புத் திரைகளை உடைத்து
கோடீஸ் வரனாக வாழ்க்கையை
அன்னை இல்லத்தில் கூட்டுக் குடும்பமாக
தங்கப் பதக்கம் பெற்று
மக்களைப் பெற்ற மகராசியாக
கலை உலகில்
தூக்குத் தூக்கி வைத்த அந்தநாள்
ராஜபாட் ரங்க துரைவரை
சிவாஜி நீ இன்று எம்மையும்
கலை உலகையும்
விட்டுப் பிரிந்தாலும் என்றும்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நெஞ்சிருக்கும் வரை நினைவும் இருக்கும்:
ஸ்ரீசாயிராம்
நடமாடும் புடைவை நிலையம்,
*நெல்லியடி.*

*சி.குணரத்தினம்,*
*புத்தூர்.*

(90411)


## தாதிகள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்குத் தாதிகள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

☆ குடும்பத்துடன் தங்குவதற்கு இடவசதி செய்து தரப்படும்.

தொடர்பு: விளம்பர இல. 1340,
மே/பா, உதயன்,
யாழ்ப்பாணம்.

(90406)


## இரங்கற் திருப்பலி

### திருமதி மேரிசூசை முத்தம்மா பிலிப்பு

எமது அருட்தந்தை பொஸ்கோ செ.தா. அடிகளாரினதும், திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி ஜீவமலர் அவர்களினதும் பாசமிகு தாயார் **திருமதி மேரி சூசை முத்தம்மா பிலிப்பு** அவர்களின் இறுதி அஞ்சலியை நினைவுகூர்ந்து நாளை (26-07-2001) வியாழன் மாலை 5.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் கலந்துகொண்டு அவருடைய ஆன்ம சாந்திக்காக வேண்டும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*செபமாலைத்தாசர்*
அருள் ஆச்சிரமம்,
5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/17556)


## விசேட மாலை நேர கணனி வகுப்புகள்

ஆரம்பம்: 25-07-2001 மாலை 6.30 மணி

| Level | Course | Subjects | Fee / Duration |
|---|---|---|---|
| Level I - | Certificate in office Applications | 1. Information Technology - I<br>2. MS Word 2000/2002 (XP)<br>3. MS Excel 2000/2002 (XP)<br>4. MS Power Point 2000/2002 (XP) | Fee: 2,000/-<br>Duration: 3Months |
| Level II - | Diploma in office Applications | 1. Information Technology - II<br>2. MS Windows 98/me/2000<br>3. MS Access 2000/2002 (XP) | Fee: 3,000/-<br>Duration: 3Months |
| Level III - | Higher Diploma in Computer Applications | 1. Internet and E - mail<br>2. Object-Oriented Programming Using JAVA/C#<br>3. Database Management Using SQL<br>4. Computer Assembling, fault diagnosis and software Installation | Fee: 4,000/-<br>Duration: 3Months |

☆ அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படும் கற்கை நெறிகள் இது என்பது குறிப்பிடத்தக்கது.

☆ அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

☆ இலகுபடுத்தப்பட்ட தவணை முறையிலான கட்டண வசதி.

**Institute of Informatics Studies**
(Affiliated to Irish International University)
**No. 100, Clock Tower Road, Jaffna.**
**T.P.No.: 021 - 2831** (C/17559) **e-mail:iis@sltnet.lk**



தாக்குதலில் எரிந்து கிடக்கும் விமானங்களின் தோற்றம்.

# ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு சுற்றாடல் பகுதிகளில் தேடுதல்

கொழும்பு,ஜுலை25

கட்டுநாயக்க விமானப் படைத் தளம் மீதான தாக்குதலை அடுத்து கட்டுநாயக்க, சீதுவ, நீர்கொழும்பு, மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, ஜா-எலப் பொலீஸ் பகுதிகளில் நேற்றுக்காலை ஊரடங்குச் சட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிகளில் பொலீஸாருடன் படையினரும் கூட்டாகப் பெரும் தேடுதல் வேட்டையை முடுக்கி விட்டிருந்தனர்.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகள் வழமைக்குத் திரும்பின. எனினும் அங்கு பரபரப்பு நிலைமை நீடித்தது.

இதேவேளை -

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இத்தாக்குதலை அடுத்து உடனடியாக மூடப்பட்டது. பயணிகளை அங்கு வரவேண்டாம் என்ற அறிவிப்பையும் அரசு உடனடியாக விடுத்தது. கட்டுநாயக்கவை நோக்கி வந்த சர்வதேச விமானங்கள் யாவும் அவசர அவசரமாகத் திசை திருப்பி வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

சென்னை, திருவனந்தபுரம், டுபாய் போன்ற விமான நிலையங்களில் அந்த விமானங்கள் தரையிறக்கப்பட்டன.

இவ்வாறு சென்னையில் தரையிறங்கிய கொழும்புக்கான நான்கு விமானங்களின் பயணிகள் சுமார் 1000 பேர் அங்கு ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் -

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் நேற்று மாலை மீண்டும் திறக்கப்படுவதாக அரசு அறிவித்திருந்த போதும், அங்கு வழமையான பணிகள், விமான சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிய வந்தது.

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நிர்மூலமான விமானங்களின் சிதைவுகள் மற்றும் சேதமடைந்த விமானங்களை அப்புறப்படுத்தும் பணிகள் அங்கு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அநேகமாக இன்று காலை அல்லது நண்பகலுக்குப் பின்னர் விமான நிலையம் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# வடக்கு – கிழக்கில் நேற்று விமானக் குண்டுவீச்சுக்கள்

## வடமராட்சியில் தாழப் பறந்த 'ஜெட்'கள்

யாழ்ப்பாணம்,ஜுலை25

கட்டுநாயக்க மீதான பெரும் தாக்குதலைத் தொடர்ந்து நேற்று வடக்குக் கிழக்கில் அகோர வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

விமானக் குண்டுவீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளமை குறித்து அரசும் அறிவித்துள்ளது.

வன்னியில் விஸ்வமடுப் பகுதியிலும் திருமலை கரையோரப் பகுதிகளிலும் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடாநாட்டின் மீதும் இரு மிக் ஜெட் விமானங்கள் சுற்றித் திரிந்தன. அவை வடமராட்சிப் பகுதியில் தாழப் பறந்ததால் அங்குள்ள மக்கள் பதற்றமடைந்தனர்.

இதேவேளை -

கட்டுநாயக்க விமானத் தளத்தின் மீதான தாக்குதலால் தாங்கள் நிலைகுலையவில்லை - பலம் இழந்து விடவில்லை - என்பதை நிரூபிக்கும் தோரணையிலேயே விமானப் படையினர் நேற்று வடக்கு - கிழக்கில் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தியிருக்கக் கூடும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (க-117)

## களப் பலி

வவுனியா,ஜுலை25

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி படையினரின் சுற்றிவளைப்பில் இருந்து தப்ப முயற்சித்த பின்னர் குண்டை வெடிக்க வைத்து பாலையன் அல்லது நிமலன் (வரப்பிரகாசம் சுரேந்திரன் - யாழ்ப்பாணம்), பூவின்பன் (செல்வராசா நகுலேஸ்வரன் - யாழ்ப்பாணம்) ஆகிய இரு உறுப்பினர்கள் களப் பலியாகினர் என புலிகள் அறிவித்துள்ளனர்.

# சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி மந்திராலோசனை!

கொழும்பு,ஜுலை25

கட்டுநாயக்க விமானத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலை அடுத்து எழுந்துள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு சிரேஷ்ட அமைச்சர்களுடன் மந்திராலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சந்திப்பு நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்தது என்றும் தெரியவந்தது.

அதேவேளை, நேற்று விடிகாலை தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்ததும் ஜனாதிபதி அவசர அவசரமாக பாதுகாப்புச் சபையைக் கூட்டினார்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் முப்படைத் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அதன்பின்னர் அவசரமாக அமைச்சரவையையும் ஜனாதிபதி கூட்டினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக அங்கு ஆராயப்பட்டு, பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் அமைச்சர்களான அனுருத்த ரத்வத்தை, மங்கள சமரவீர, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி ஆகியோர் தாக்குதல் நடந்த பகுதிக்கு நேற்று நண்பகல் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர். (உ-3-9)

## விசாரணைக்கு நால்வர் குழு நியமனம்

கட்டுநாயக்க விமானத் தளத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் குறித்தும் -

அங்கு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்திருக்கக் கூடிய ஓட்டைகள் குறித்தும் -

விசாரணை நடத்துவதற்கு ஏயர் வைஸ் மார்ஷல் ஒருவர் தலைமையில் நால்வர் கொண்ட குழுவை விமானப் படைத்தளபதி நேற்று மாலை நியமித்துள்ளார். (உ-3)

# சிதறி ஓடினார்கள் பயணிகள்!

கொழும்பு,ஜுலை25

கட்டுநாயக்கவில் விமானங்கள் மற்றும் அங்கிருந்த எண்ணெய்க் குதம் ஆகியன தீப்பிடித்து எரிந்ததால் அப்பகுதி எங்கும் புகைமண்டலம் பரவியது. சுற்றாடல் பகுதிகளுக்கும் அந்தப்புகை பரவி வியாபித்தது.

இதேசமயம் விமான நிலையத்திற்கு வந்திருந்த பயணிகள், அவர்களை வழியனுப்ப வந்திருந்தவர்கள், பயணிகளை அழைத்துச் செல்ல வந்திருந்த பலரும் தாக்குதலை அடுத்து நாலா பக்கமும் பீதியுடன் சிதறி ஓடினர்.

விமான நிலையத்திலேயே தங்களின் பொதிகளை விட்டு விட்டு ஓடியவர்கள் ஒருபுறம். பயணத்துக்கு தயாராக் நின்ற சமயம் தமது 'பாஸ்போட்' போன்ற ஆவணங்களைக் கூட கருமபீடங்களில் விட்டு ஓடியவர்கள் மறுபுறம்.

உள்நாட்டு பயணிகள் மட்டுமன்றி வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் திக்குத்திசை தெரியாமல் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

பதற்றத்துடன் ஓடிய பயணிகளில் சிலர் வீழ்ந்து உரசல் காயங்களுக்கு உள்ளானார்கள். (க-3)

# புலிகளை ஏற்றி வந்த றோசா மினிபஸ் எங்கே?

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் புலிகளின் உறுப்பினர்களை அப்பகுதிக்கு ஏற்றிவந்ததாகக் கூறப்படும் - பிறவுண் மற்றும் வெள்ளை நிறங்கள் தீட்டப்பட்ட - றோசா ரக மினி பஸ் ஒன்றைப் பொலீஸார் தேடிவருவதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

உள்ளே இருப்பவை வெளியே தெரியாதபடி பூச்சுப் பூசப்பட்ட (Tinted) ஜன்னல்களைக் கொண்ட - குளிரூட்டப்பட்ட - இந்த மினி பஸ்ஸின் முகப்பில் 'மாத்தறை' என்று அட்டை தொங்கவிடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த பஸ்ஸில் இருந்து சுமார் பதினைந்து முதல் இருபது பேர் கட்டுநாயக்க விமானத் தளத்துக்கு அருகில் உள்ள மைதானம் ஒன்றில் நேற்று முன்தினம் முன்னிரவு வந்திறங்கி அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் செலவிட்டதாகவும் -

மாத்தறையிலிருந்து சுற்றுலா வந்த, கிரிக்கெட் வீரர்கள் போல அப்பகுதி வாசிகளுக்கு அவர்கள் தோற்றமளித்ததாகவும் - கூறப்படுகின்றது.

இவர்கள் குறித்து சந்தேகம் கொண்ட அப்பகுதிவாசிகள் சிலர், அதுபற்றி பொலீஸாருக்கும் விமானப் படையினருக்கும் தகவல் தெரிவித்தனராயினும் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இப்போது விசாரணை நடத்தும் பொலீஸார் அந்த மைதானத்தில் வந்திறங்கியோர் அங்கு தமது இரவு உணவை முடித்துக் கொண்டு புறப்பட்டதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அவர்கள் டின்னில் அடைக்கப்பட்ட உணவுகள், சீஸ்கட்டிகள், சொக்கலேட்டுக்கள், கொத்துரொட்டிகள் ஆகியவற்றை இரவு உணவாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இரவு உணவை முடித்துக் கொண்ட இக்குழுவினர், அந்த நேரத்தில் அங்கு நடைமுறைக்கு வரும் மின்வெட்டைப் பயன்படுத்தி, தமது இலக்குகளை நோக்கி ஊடுருவியதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## பலாலி பயணிகள் விமானசேவை வழமைபோல்

யாழ்ப்பாணம்,ஜுலை25

பலாலி - இரத்மலானை பயணிகள் விமானசேவை நேற்று வழமையாக இடம்பெற்றது.

இன்றும் வழமைபோல் சேவை இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி சப்பறமும், 17ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 18ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், 19ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனமும் இடம் பெறவுள்ளன.

ஆலயச் சுற்றாடலில் வழமை போன்று தெய்வீக நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்களின் வசதிகருதி ஆலயச் சுற்றாடலில் சாரணர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர், மக்கள் நலன்புரிக் கழகத்தினர் மற்றும் தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வழமைபோல் இம்முறையும் செயற்படவுள்ளனர். (க-10)

# கட்டுநாயக்க விமானப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்புறமாகத் திருப்ப -

விமானப்படைத் தளத்துக்குப் பின்புறம் புற்பற்றைகள் மண்டிக்கிடக்கும் கதிரான வழியாக - பின்புறத்தில் - நாசூக்காக முன்னேறிய இரண்டாவது அணி றொக்கட் லோஞ்சர்களைக் கொண்டு ஒவ்வொரு விமானமாக இலக்குவைத்துத் தாக்கி அழித்தது - என்று கூறப்பட்டது.

தாக்குதல் நடத்திய புலிகள் இராணுவச் சீருடை போன்று - விமானப் படையினரின் சீருடையை ஒத்த - சாம்பல் நிற அங்கிகளை அணிந்திருந்தனர்.

புலிகளின் திடீர்த்தாக்குதலை அடுத்து விமானப் படைத்தளம் யுத்த களமானது. இரு தரப்பினரதும் குண்டுகள், றொக்கட்டுகள், வேட்டுகளால் அப்பகுதி அதிர்ந்தது. புலிகளின் றொக்கட்டுகளின் தாக்குதலுக்கு இலக்கான விமானங்கள் வெடித்துச்சிதறி எரிந்தபோது எழுந்த சத்தம் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலும் கேட்டதாகக் கூறப்படுகின்றது.

விமானப் படைத்தளத்தில் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்திய புலிகளின் அணிகள், பின்னர் விடியும் சமயம் அங்கிருந்து நகர்ந்து, அருகிலிருந்த சர்வதேச விமான நிலையத்தின் பக்கம் கண் வைத்தனர்.

அவர்களது முதல் தாக்குதலில் மூன்று சரக்கு விமானங்கள் சேதத்துக்குள்ளாகின.

### குறி தவறாத தாக்குதல்

முன்னேறிய புலிகளின் அணியைச் சேர்ந்த இருவர் சர்வதேச விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு அறைக்கு மேலே நுழைந்து அங்கிருந்தபடி, றொக்கட் லோஞ்சர்கள் மூலம் இலக்கு வைத்து மூன்று பயணிகள் விமானங்களை குறிதவறாமல் தாக்கி நாசப்படுத்தினர். அங்கிருந்தபடியே அவர்கள் அவ்வப்போது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்ததால் முற்பகல் வரை அங்கு சண்டை நீடித்தது.

எனினும் இராணுவக் கொமாண்டோப்படை வரவழைக்கப்பட்டு, அவர்கள் கட்டுப்பாட்டு அறைக்கு மேலிருந்தவாறு தாக்குதல் நடத்திய இரு புலிகளையும் சமாளித்துச் சுட்டுக்கொன்றதோடு நேற்றுக்காலை நடந்த ஆறு மணி நேர மோதல் முடிவுக்கு வந்தது.

தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் ஏழு புலிகளின் சடலங்கள் விமானநிலையம், விமானத்தளம் ஆகிய பகுதிகளில் வீசப்பட்டுக் கிடந்தன. மற்றிருவர் தற்கொலைப் போராளிகள் போன்று தம்மைத் தாமே வெடிக்க வைத்து உயிரிழந்தனர்.

சர்வதேச விமானநிலையத்தின் கட்டுப்பாட்டு அறைக்கு மேல் இருந்து தாக்குதல் நடத்திய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதோடு இச்சண்டையில் உயிரிழந்த புலிகளின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்தது. உயிரிழந்த புலிகளில் தற்கொலைப் போராளிகள் தவிர்ந்த ஏனைய 9 பேரின் சடலங்கள் பின்னர் மீட்கப்பட்டன.

### 5 படையினர் பலி!

அப்பகுதியில் நேற்றுக் காலை நடந்த சமரில் மூன்று விமானப்படையினரும் இரண்டு இராணுவத்தினருமாக மொத்தம் ஐவர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதவிர, இந்த மோதல்களில் இடையில் சிக்கி ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸில் வேலை செய்யும் ஒரு ரஷ்யப் பொறியியலாளர், ஒரு பத்திரிகையாளர், 25 படையினர் உட்படப் பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலை நடத்திய புலிகளின் அணிகளில் குறைந்தது இருபது பேராவது இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

அவர்களின் 11 பேர் உயிரிழந்துவிட்டதால் எஞ்சியோர் பாதுகாப்பாகத் தப்பிச் சென்று விட்டதாகக் கருதப்பட்டது. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.